# முதல்வன்

ஓசை – 1

இதழ் 1

சித்திரை, வைகாசி, ஆனி 2012



## இவர்களின் எதிர்காலம்?



## அமெரிக்காவா/ சீனாவா ?

சிவராம் மறக்கப்பட்ட மனிதரா!

விலை: 60/=

காலாண்டு பல்சுவை இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே.... பக்கம்


1. அமெரிக்காவா? சீனாவா? 2
2. விண்வெளியில் போட்டியிடும் இந்தியாவும் சீனாவும் 3
3. அந்த மாஜி காதலி 5
4. வடமராட்சியில் வலிந்து உதவும் அமைப்பு 7
5. உங்களின் கேள்வியும் நெருப்பனின் பதில்களும் 8
6. *வருகிறது அடுத்த பனியுகம்* 9
7. ஈழத்தமிழருக்காக இந்திராகாந்தி 10
8. முயற்சி திருவினையாக்கும் 12
9. துரத்தும் நிழல்களின் உக்கிரம் 14
10. சனசமூக நிலையம் மூலமாக விருத்தி செய்யப்படக்கூடிய இளைஞர் மேம்பாடு 18
11. *இவர்களின் எதிர்காலம்* 19
12. *சாதனை மாணவிகள்* 20
13. ஆணாக இருந்து பெண்ணாக மாறி உலக அழகிப்போட்டிக்குத் தயாராகும் பெண் 20
14. கண்களைக் காக்கும் கறுப்புக் கண்ணாடி 21
15. சோகப்படங்கள் ஏற்படுத்தும் தாக்கம் 22
16. மறக்கப்பட்ட மனிதரா சிவராம் (தராகி) 23
17. தனியார் பஸ் நடத்துனர்களின் அடாவடி 24
18. மின்காந்த அலைகள் என்றால் என்ன? 24
19. சுற்றுலா மையமாகும் நிலாவரை 25
20. விளம்பரங்கள் 26



ஆசிரியர் குழு:

பிரதம ஆசிரியர்

**வே. தவச்செல்வம் (J.P)**

தும்பளை, பருத்தித்துறை

ஊடகவியலாளர்

0779229842

துணை ஆசிரியர்

**இரா. [illegible]மோகன்**

[illegible] தமிழ் பட்டதாரிகள்

சங்கத் தலைவர்

0775025058.


## ஆசிரியர் உள்ளத்தில் இருந்து

பல நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஒரு புதிய சஞ்சிகை ஊடாக உங்களுடன் உறவாட இறைவன் இடம்கொடுத்திருக்கிறான் ஏற்கனவே “வான்முழக்கம்” என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்த போதும் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக அதை தொடர்ந்து வெளியிட முடியவில்லை தற்போதைய சூழலின் காலத்தின் தேவை கருதி மீண்டும் ஊடகத்துறையில் கால் பதிக்கிறேன். எமது இனம் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகள் கொஞ்சநஞ்சமல்ல இவற்றில் முக்கியமானவை எமது கலை கலாச்சாரம் பண்பாட்டுவிழுமியம் கல்வி என்பனவாகும். அத்துடன் எமது அரசியல் பிணக்கும் முக்கியமானது அரசியல் தொடர்பில் நான் அதிகம் கதைத்துக் கொள்ள விரும்பவில்லை. எமது உறவுகளின் கல்வி, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை கட்டிகாப்பது எமது ஒவ்வருவரினதும் தலையாய கடமையாகும். அத்துடன் வளர்ந்துவரும் இளம் சமூகத்தை பல வழிகளிலும் ஊக்குவிக்க நாம் ஆசைப்படுகிறோம். இதற்கு “முதல்வன்” என்ற இச்சஞ்சிகை நிச்சயம் களம் அமைத்து கொடுக்கும் நீங்களும் நாளை இந்த நாட்டின் முதல்வனாக பாடசாலையில் முதல்வனாக நிர்வாக பீடத்தில் முதல்வனாக எழுத்துத்துறையில் முதல்வனாக வரவேண்டும். என உங்களை வாழ்த்துகிறேன்.


என்றும் அன்புடன்<br>பிரதம ஆசிரியர்<br>வே. தவச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவா? சீனாவா?

இன்றைய உலகின் வல்லாதிக்க சக்திகளாக அமெரிக்காவும் சீனாவும் வளர்ந்து வருவதை எவராலும் தடுக்கமுடியாத நிலையே உள்ளது. இருந்த போதிலும் இரண்டு நாடுகளினதும் நட்புறவு என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இரண்டு நாடுகளும் தமது பலங்களை மதிப்பீடு செய்ய முற்பட்டால் அதுமுன்றாம் உலக மகா யுத்தத்திற்கே வழிவகுக்கும் இந்த நிலையில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் போர் மூளக்கூடிய அபாயநிலை காணப்படுகிறது. இரண்டு நாடுகளும் ஒன்றை ஒன்று பிடித்து விழுங்கக்கூடிய நிலையிலேயே உள்ளன. ஆசியாவின் வல்லாதிக்க சக்தியாகதான் மட்டுமே இருக்க வேண்டும். என சீனாவிரும்பினாலும். இந்தியா இதனை முறியடிக்கும் விதத்திலான ராஜீக நகர்வுகளையேமேற்கொண்டு வருகிறது. இதை ஆயுத உற்பத்தி உட்பட ஆசியாவின் அரசியல் நகர்வுகளிலும் இந்தியாவின் ஆதிக்கம் உறுதி செய்து வருகிறது. இறுதியாக ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்த போது சீனா எதிர்ப்பு வெளியிட இந்தியா அமெரிக்காவுடன் இணைந்து ஆதரித்தது இதன்மூலம் அமெரிக்காவுடனான உறவை இந்தியா வலுப்படுத்தியுள்ளதுடன் சீனாவிற்கானமறைமுகமான எச்சரிக்கையினையும் இந்தியாவிடுத்துள்ளது. சீனாவைப் பொறுத்தவரை அதன் கடுமையான எதிரியாக இதுவரை இருந்து வருவது இந்தியாவாக இருந்தாலும் தற்போது அமெரிக்கா மீதே கடுமையான கோபத்தில் சீனா இருக்கிறது இதற்கு பிரதான காரணம் ஆசியாவின் முக்கியமான இடங்களை இலக்கு வைத்து அமெரிக்கா தனது படைத்துறைக் கட்டமைப்புகளை நகர்த்துவதே ஆகும். அமெரிக்காவின் ஆசிய பசுபிக்கட்டளை பீடத்தின் சுறுசுறுப்பான செயற்பாடு சீனாவை எரிச்சல் அடையவே வைத்துள்ளது இலங்கை விவகாரத்தில்



அமெரிக்காவின் தலையீடு கூட தமிழரின் மீது கொண்ட கரிசனை காரணமான வெளிப்பாடு அல்ல மாறாக தனது பூகோள அரசியல் நலன்களை முன்நிறுத்துவதற்கான செயற்பாடாகவே உள்ளது. இறுதியாக வெல்லப்போவது அமெரிக்காவா சீனாவா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.


த.தர்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் போட்டியிடும் இந்தியாவும் சீனாவும்

ஆசியாவின் பலம் பொருந்திய இரு பெரிய நாடுகளான இந்தியாவும் சீனாவும் உலகிலேயே பாரியதொரு தொலைக்காட்டியை உருவாக்கவுள்ளன. ஹாவாய் தொலைக் காட்டியில் பங்காளியாக இணைந்து கொள்வதென்ற தங்களின் தீர்மானத்தின் அடிப்படையில் வானிலை ஆராய்ச்சியில் இரு



நாடுகளும் தீவிரம் காட்டியிருப்பதாக பிரிட்டனின் டெய்லி மெய்ல் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த தொலைக்காட்டி நிர்மாணத்திற்கான உத்தேச செலவினம் 1 பில்லியன் டொலரென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் செலவினத்தை இந்தியாவும் சீனாவும் பகிர்ந்து கொள்ளும் மௌனா கியா எரிமலையின் உச்சியல் இந்தத் தொலைக்காட்டியும் இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளவுள்ளன. இது மிகவும் நவீனமான தொலைக்காட்டியாக அமையும்.

2018ல் இதன் அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் ஹாவாயிலுள்ள மௌனா எரிமலையின் உச்சியில் 30 மீற்றர் நீளத்தில் அமைக்கப்படும் இந்த தொலைக்காட்டி நிர்மாணத்திற்கான திட்டத்தில் இந்தியாவும் சீனாவும் கைச்சாத்திட்டுள்ளன.

சீனச் சமூகத்தின் பௌதீக வளத்தின் பாய்ச்சலை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று சீனாவின் தேசிய வானிலை அவதானிப்பு நிலையத்தின் வான் பௌதீகவியல் துறைப்பேராசிரியர் குடி மாவோ கூறியுள்ளார். 30 மீற்றர் தொலைக்காட்டியானது சுமார் 100 அடி நீளமான கண்ணாடியைக் கொண்டிருக்கும். இன்று பயன்படுத்தப்படும் பாரிய தொலைக்காட்டிகளிலும் பார்க்க 9 மடங்கு அதிகப்படியான ஒளியைத் திரட்டும் பகுதியை கொண்டதாக இது உருவாக்கப்பட்டுள்ளது. பிரதிமைகளும் மூன்று மடங்கு கூர்மையானதாக இருக்கும்.

ரி.எம்.மி அறியப்பட்ட இந்தத் தொலைக்காட்டியின் மூலம் கிரகங்களை அவதானிக்கக்கூடியதாக இருக்கும் மற்றும் நட்சத்திரங்களையும் இதன் மூலம் தெளிவாக பார்க்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை ஆராய்ச்சியாளர்கள் சூரியனைத் தவிர எனைய கிரகங்கள் மற்றும் புதிய கிரகங்கள் நட்சத்திரங்களை அவதானிக்கக் கூடிய விதத்தில் இந்தத் தொலைக்காட்டி உருவாக்கப்படவுள்ளது அத்துடன், 13 பில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பால் பிரபஞ்சத்தின் ஆரம்பகால வருடங்கள் குறித்து விஞ்ஞானிகள் கண்ணோட்டம் செலுத்தவும் இது உதவும்.

சீனாவில் பல பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தொழில் நுட்பரீதியான விடயங்களை முன்னெடுக்க நாம் விரும்புகின்றோம். எம்மால் முடிந்த அளவுக்கு துரிதமாக செல்ல விரும்புகின்றோம். அத்துடன் உலக சமாதானத்துக்கும் பங்களிப்புச் செலுத்த விரும்புகின்றோம் என்று பேராசிரியர் சூடே மாவோ கூறியுள்ளார் அவதானியாக சீனா 2009 இணைந்துகொண்டது. இதற்கு மறுவருடம் இத்துறையில் பிரவேசித்தது. TMC சபையில் இப்போது பங்காளியாகவுள்ளன.

மௌளா கியாவில் ஜப்பானும் தனக்குச் சொந்தமான பெரிய தொலைக்காட்டியை வைத்திருக்கிறது. 8.3 மீற்றர் சுபா மூ என்ற தொலைக் காட்டியை வைத்திருக்கும் ஜப்பானும் ரி.எம்.சி வானிலை அவதானிப்பு நிலையத்தின் பங்காளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாக உலகின் பாரிய வானிலை அவதானிப்பு நிலையமென்ற பெயரை ரி.எம்.சி பெற்றிருக்காவிடினும் ஐரோப்பாவின் மிகப் பெரிய தொலைக்காட்டியை நிர்மாணிப்பதில் பங்குடமை வகிக்கின்றது. அந்தத் தொலைக்காட்டி 42 மீற்றர் நீளமுடையதும் 138 அடி கண்ணாடியைக் கொண்டதுமாக விளங்கும்.

எமது சூரியக் குடும்பத்திற்கு வெளியே உள்ள கிரகங்களின் பூர்வீகக் கருத்துருவங்கள் வெளிப்படுத்தப்படாத விடயம், வெளிப்படுத்தகப்படாத சக்தி என்பவற்றை ஆராய ரி.எம்.ரி யை பயன்படுத்த சீன வானிலை ஆராய்ச்சியாளர்கள் விரும்பும் சாத்தியம் இருப்பதாக முாவோ கூறியுள்ளார்.

கோட்பாட்டு ரீதியான வான் பௌதீகவியலாளர்கள் சீனாவில் முன்னிலையில் திகழ்கின்றனர் ஆனால் வானிலை அவதானிப்பு நிலையம் வானிலை ஆராய்ச்சித்துறையிலேயே இருப்பதாக மாவோ கூறியுள்ளார். இதனை வெற்றி கொள்ள இந்தத் தொலைக் காட்டி உதவுமெனக் கருதப்படுகிறது.

விஞ்ஞான ரீதியான தனது இலக்கை எட்டும் குறிக்கேளுடன் சீனா உள்ளது. எம்மால் முடிந்தளவுக்கு துரிதமாக எட்டிப்பிடிக்க நாங்கள் விரும்புகின்றோம் என்று அவர் கூறியள்ளார். உலகுக்கு தனது பிரதிமையை வெளிப்படுத்து வதற்கு இத்திட்டம் பெறுமதி வாய்ந்தது என்று மாவோ தெரிவித்துள்ளார்.

**T.தஷானா**
ஆண்டு 8A
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

# பொது அறிவுப் போட்டி

1. கணணித் தரவுகளின் மிகச் சிறிய பூனிட் எது?
2. திருக்குறளை முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
3. AIDS வைரஸ் முதன் முதலில் எந்த நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது?
4. வரைபடத்தை (Map) கண்டறிந்தவர்கள் யார்?
5 தபால் துறையின் தந்தை என சிறப்பிக்கப்படுபவர் யார்?
6. உலகில் முதன் முதலில் வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் துவக்கிய நாடு எது?
7 உல்கில் மிக அதிக தூரம் பறக்கும் பறவை எது?
8 எல்லாக் கண்டங்களிலும் எல்லா தட்ப வெட்ப நிலையங்களிலும் வசிக்கும் ஒரே விலங்கு?
9 TNT இன் விரிவாக்கம் என்ன?
10 தங்கக் கடற்கரை (Golden Coast) என்றழைக்கப்பட்ட நாடு?
11 மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம்?
12 MMS இன் விரிவாக்கம் என்ன?
13 ஜான்பெய்ட் தொலைக்காட்சியைக் கண்டு பிடித்த போது முதன் முதலில் அதற்கு என்ன பெயரிட்டிருந்தார்?
14 எவ்வித நோக்கமும் இன்றி இன்டர்நெட்டில் உலா வருபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
15. இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபஷ்ஷ பிறந்த இடம் எது?

இப்போட்டியில் மாணவர்கள் மட்டும் பங்கு பற்ற முடியும் பங்குபற்றும் முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுவதுடன் இப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். குலுக்கல் முறையின் மூலம் போட்டியில் வெற்றிபெறும் அதிஷ்ர சாலிகள் தெரிவுசெய்யப்படுவர் இப் போட்டிக்கான இறுதித்திகதி 28.06.2012 எமது அலுவலக முகவரிக்கு தங்களது விடைகளை விரைவாக அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த மாஜி காதலி

மலையாள மூலம்: பொற்றக்காட்

சிங்கப்பூரில் சூரி ஒரு சீனவாலிபன், கட்டிளங்காளை. அவன் இங்க இலாக்காவில் சேர்ந்து சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியும். தனது மேலதிகாரிகளிடமிருந்து விமர்சனத்திற்குரிய பாராட்டைப் பெறத் தகுதிவாய்ந்த ஒரு செயலை ஆற்ற அவனால் முடியவில்லை.

நம்பகமான பிரயாணிகளின் உடையில் இறங்கும் கள்ளக்கடத்தல் காரரின் தந்திரங்களையும் திட்டங்களையும் அவன் பூரணமாக அறிந்திருந்தான் ஆனாலும் இதுவரையில் யாரிடமிருந்தாவது கள்ளக்கடத்தில் பொருட்களைப் பிடிப்பதில் வெற்றி பெறவில்லை.

அவன் அதிர்ஷ்ட மற்றவன் என்று சொல்வதே போதும்.

அவனினும் பார்க்க அதிஷ்டம் வாய்ந்த கூட்டாளிகள் பிரயாணிகளின் பைக்குள்ளிருந்தும், பிரயாணி மூட்டைகளிருந்தும் கண்டு பிடிக்கப்பட்ட விதம் விதமான கள்ளக் கடத்தல் பொருட்களை காண்பிக்கும் போது ஆயி மிகவும் ஏமாற்றமடைந்தவனாக காணப்படுவான் ஆனால் ஆயியின் துர் அதிஷ்டம், இவனால் பரீட்சிக்கப்பட்டவை எதலாம் விதிவிலக்கின்றி நேர்மையானவையாகவும், அடிப்படை கள்ளக்கடத்தலுக் குரிய அறிகுறி சிறிதேனும் இல்லாதவையாகவே இருந்தன. ஆயிக்கு ஒரே விரக்தியாக இருந்தது.



வழக்கம் போல அன்றும் மன விசாரத்துடன் சுங்கவிடுதிக்குச் சென்றான் தாய்லாந்தில் இருந்து ஒரு கப்பல் வந்திருந்தது. அதில் கள்ளக்கடத்தில் பொருட்கள் அதிகம் இருக்கக் கூடும் பிரயாணிகள் அவர்களின் மூட்டை முடிச் சுக்களுடன் அங்கச் சோதனைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.



சோதனை கொடூரமானதும் கடினமானதுமாக இருந்தது காக்கி அணிந்த உத்தியோகத்தரும் 'மல்டி'யில் நின்ற இன்ஸ்பெக்டர் யாவரும் தடைசெய்யப்பட்ட பொருட்களை தேடுவதில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தனர் மீண்டும் ஆயியின் துர் அதிஷ்டம்.அவனின் சொந்தக்காரரின் மீது அவனுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

இரண்டு மணித்தியாலங்களில் சோதனை முடிந்து பிரயாணிகள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர் பிரயாணிகளிடமிருந்தும் பிடிக்கப்பட்ட வரியிறுக்கப்பட வேண்டிய பொருட்கள் மேசையில் பரப்பப்பட்டிருந்தன.

ஆயி சிகரட் ஒன்றைப் புகைத்த வண்ணம் ஒரு முலையில் நின்று கொண்டிருந்தான்.

"சந்தேகமில்லாமல், உன்னால் பிடிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலை நீ தயாரித்திருப்பாய் இல்லையா? உனக்கு விரைவில் (பதவி) உயர்வு கிடைக்கிறது" என்பது போன்ற ஒரு இகழ்வான குறிப்புடன் இன்ஸ்பெக்ட்டர் தன் மேல் கூறுவதை அவனால் கற்பனை செய்ய முடிந்தது.

"நான் இந்த உத்தியோகத்திற்கே வந்திருக்கக் கூடாது" ஆயி நூறாவது முறையாக் இப்படி எண்ணிக் கொண்டான்.

திடீரென, ஒரு சீன மங்கையின் முகம் அவன் கவனத்தை ஈர்ந்தது மிகவும் கூர்மையாக அவளை அவதானிக்கலானான்

அவள், தாய்லாந்துக் கப்பலில் வந்த ஒரு பிரயாணி ஒரு மர நிழலில் தன் மூட்டை முடிச்சுக்களைக் குவித்து விட்டு யாருக்காகவோ காத்திருந்தாள் அவளுடைய முதுகில் ஒரு குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடன் ஒட்டியபடி கிடந்தது.

அபூஸ் அவன் கூவினான் ஆம், அவள் ஆபூங் கே தான்

அவனுடைய நினைவுகள் நாலு வருடங்களுக்கு பின்னே பாய்ந்தன. அப்போது அவன் பாங்கொக்கில் தன்னுடைய மாமனின் மரக்காலையில் நிர்வாகியாக கடமையாற்றிக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் அவள் அபூங்கைச் சந்தித்தும் காதல் கொண்டதும் அப்பொழுது ஆபூங் ஒரு கேளிக்கை விடுதியில் நடன மாதுவாக இருந்தாள் 'மஞ்சள் பறவை என்று எல்லோராலும் அழைக்கப்பட்டாள் மஞ்சள் சிலியோங் சம் அணிந்து அவள் ஆடும் நடனத்தைப் பார்க்க அந்தப் பட்டினமே கூடிவிடும்.

அவள் அவனின் அன்புக் காதலியாக எப்படியானாள் என்பதையும், தன்னுடைய ஊதியத்தின் பெரும்பகுதியை எப்படி அவளுக்காக வியர்த்தும் செய்தான் என்பதையும் அவள் நினைவு கூர்ந்தான்

இப்பொழுது, அதே பெண் இங்கே சிங்கப்பூரில் ஆயி ஜாக்கிரதையாக அவனை அண்மினான்.

காக்கியணிந்த சுங்க அதிகாரி விழுங்கும் பார்வையுடன் அவனின் பக்கமாக வருவதைக் கண்டதும், பீதியடைந்தவளாகப் பின் வாங்கி, மறுபுறம் திரும்பினாள்

"பார் இங்கே' சூயி கண்டிப்பான குரலில் ஆணையிட்டாள் பார்க்க அஞ்சியவளாய் மீண்டும் திரும்பிக் கொண்டாள்.

"யாருக்காகத் காத்திருக்கிறாய்" சூயி கேட்டான் அவனுக்குப் பதிலறுக்காது, அவள் அப்பால் செல்ல எத்தனிப்பதைக் கண்டதும் சூயி தடுத்து நிறுத்தினான் அவள் அவன் மீது ஒரு கூர்மையான பார்வையை வீசினாள்

"ஆம் அது 'அபூஸ்' கே தான்" சூயி தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். "ஆனால் அவன் என்னை அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவிலலையே"

"அந்தக் குழந்தையை இங்கே கொடு" மீண்டும் அவளை நெருங்குவதற்கு நல்ல வாய்ப்பாக இருந்தது.

அவன் முன்னே நகர்ந்தவளாய் குழந்தையைத் தொட்டுப் பார்த்தான் அது பனிக்கட்டியாய் குளிந்திருந்தது.

'ஓ' என்ன இது" அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை அவள் குழந்தையை கீழே வீசி விட்டு நழுவினாள்

சூயி குனித்து குழந்தையைத் தூக்கினாள் அது இறந்து கிடந்தது நெருங்கி பரிசோதித்துப் பார்த்ததில் அதன் வயிறு தைக்கப்பட்டிருப்பதைக் கண்டான் தையலை அறுத்துத் திறந்து பார்த்தான் ஒரு துணியினால் பத்திரமாக சுற்றப்பட்ட அபின் நிரம்பியிருந்தது

வியக்கத் தக்க அபின் பிடிபட்டதனால் அவனுக்கு பதவி உயர்வு கிடைத்தது சூயி பதவி உயர்வைப் பற்றிய அறிவித்தல் செய்தி பெற்றபொழுது ஆபூங் பத்து வருட சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தாள் தன்னுடைய நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு அவளை அந்தமாஜிக் காதலியை சிறையில் சென்று காண அவன் மறக்கவில்லை.

தமிழில் புலோலியூர்
செ.கந்தசாமி.

## சிறப்பு பெயர்கள்

| | |
|---|---|
| சூரியன் மறையும் நாடு | - இங்கிலாந்து |
| சீனாவின் வாசல் | - கொயாங்கோநதி |
| இருண்டகண்டம் | - ஆபிரிக்கா |
| இந்தியாவின்வாசல் | - மும்பாய்துறைமுகம் |
| மூங்கில் வீடு | - கலிபோர்ணியா |
| ஐரோப்பாவின் கோழிக்கூடு | - நெதர்லாந்து |
| உலகத்தின் தடுக்கப்பட்ட இடம் | - திபெத் |
| மரகத்தீவு | - அயர்லாந்து |
| உலக சக்கரைக் கிண்ணம் | - கியூபா |
| நைல் நதியின் கொடை | - எகிப்து |
| ஆயிரம் ஏரிகள் நாடு | - பின்லாந்து |
| புனித நாடு | - பாலஸ்தீனம் |
| ஐரோப்பாவின் நோயாளி | - துருக்கி |
| அழியா நகரம் | - உரோமாபுரி |
| பொன்கோபுரநாடு | - பர்மா |
| பனிக்கட்டி வீடு | - கிறின்லாந்து |
| செங்கட்டி வீடு | - சீனா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் வலிந்து உதவும் அமைப்பு

வடமராட்சி பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அல்லல் உறும் குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களை கொண்ட பெண்களின் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் “கருணை உள்ளம்” என்ற அமைப்பு தையல் பயிற்சி வகுப்பு ஒன்றை பொலிகண்டி கிழக்கில் நடத்தி வருகிறது யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல வருடங்கள் கடந்தும் இந்த பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் பலாலி பகுதியைச் சேர்ந்த மக்கள் இம் முகாமில் வாழ்ந்து வருகின்றனர். இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் இப்பெண்களிற்கு இது ஒரு ஆறுதல் தரும் சேவையாகும் இப்பகுதியை சேர்ந்த பிற இடங்களைச் சேர்ந்த யுவதிகளும் பயன் பெறுகிறார்கள். “கருணை உள்ளம்” என்ற இந்த நிறுவனமானது தாய், தந்தையரை இழந்த சிறுவர்களிற்கு உதவுவதுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளை இழந்தவர்களிற்கும் உதவி வருகிறது. அத்துடன் வயோதிபர்கள் ஏழைகள் எனப் பலருக்கும் உதவும் ஒரு அமைப்பாகவும் இவ் அமைப்பு உள்ளது இவ் அமைப்பை தும்பளை மணியகாரன் சந்தியில் உள்ள J.K மரக்காலை மற்றும் கட்டடப் பொருள் உற்பத்தி நிலையத்தினர் தமது சொந்த நிதியில் இயக்கி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் தாயகம் சிறுவர் இல்லத்தை தனிநபர் ஒருவர் நடத்துவதைப் போல இன்நிறுவனத்தையும் வடமராட்சியில் தனிநபர் தனது வருமானத்தில் இருந்து நடத்துவது வரவேற்கத்தக்கது. இது பொதுநலம் சார்ந்தது தங்கள் குடும்பம் மட்டும் தான் மகிழ்வுடன் வாழ்ந்தால் போதும் என்று சிந்திக்கும் இச் சமுதாயத்தில் பொது நலன் சார்ந்து முன்னெடுக்கப்படும் இப்பணி பாராட்டத்தக்கது இத்தகைய சமூகப் பணிகளை எமது சமூகத்திற்கு ஆற்ற வர்த்தகர்கள் தனவந்தர்கள் முன்வரவேண்டும். கடவுளின் பெயரில் பெயரை வைத்துக்கொணடு மாறி மாறி ஆலயம் தொழுது விட்டு எச்சில் கையால் காகம் துரத்தவும் யோசிக்கின்ற வர்த்தகர்கள் எனியாவது தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனையை மறக்க இறைவா வரம் கொடுக்காயா?





*த. தர்கா*
தும்பளை கிழக்கு
தும்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களின் கேள்வியும் நெருப்பனின் பதில்களும்

**கேள்வி:** கல்வியில் உயர்வதற்கு சினிமா தடையாக உள்ளதா?

**நெருப்பன் பதில்:** சினிமாவைப் பொறுத்தவரை தரமான சினிமாக்களும் அறிவியல் சார்ந்த கருத்துக்களை கூறும் சினிமாக்களும் உண்டு அதைவிட கீழ்தரமான சினிமாக்களும் உண்டு ஆனால் மாணவர்களைப்பொறுத்தவரை சினிமாமோகத்தை தவிர்த்தால் கல்வியில் உச்சத்தை எட்டலாம்

*வ.மிகுந்தா பொலிகண்டி*



**கேள்வி:** அரசியல் வாதிகள் வெள்ளை வேட்டி கட்டுவதன் மர்மம் என்ன?

**நெருப்பன் பதில்:** அரசியல் வாதிகள் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்வதால் உடல் முழுக்க கறை படிந்துள்ளதால் உடையையாவது வெண்மையாக அணிய விடுங்களேன் பிளீஸ் இது எல்லா அரசியல் வாதிகளிற்கும் பொருந்தாது

*அழகர் சாமி சண்டிலிப்பாய்*



**கேள்வி :** தமிழ்களின் வாழ்வில் வசந்தம் வீசுமா?

**நெருப்பன் பதில்:** வடக்கின் வசந்தம் வீசுதோ இல்லையோ கடவுள் தமிழர்களை காப்பாற்றுவார்போல் உள்ளது கடவுளும் கைவிட்டால்தமிழர்கள் கடலில் தான் விழ வேண்டும்.

*சரண்யா விசுவமடு*

**கேள்வி: பஸ்களில் பயணம் செய்யும் வயோதிபர்களின் தொல்லையை கட்டுப்படுத்த முடியாதா?**

**நெருப்பன் பதில்: உங்கள்பார்வையால் அவர்களை கட்டுப்படுத்துங்கள் முடியாவிட்டால் காலணியால் அபிசேகம் செய்யுங்கள் அடங்கி விடுவார்கள்**

க. சுரேந்திரன், பளை

**கேள்வி :** இளையவர்ளின் கலாச்சார சீரழிவிற்கு காரணம் என்ன?

**நெருப்பன் பதில்:** கட்டுப் பாடற்ற வளர்ப்பே பிரதான காரணம் அத்துடன் இத்தகைய கலாச்சார சீரழவில் ஈடுபடுபவர் இலகுவாக தப்புவதும் இதற்கு பிரதான காரணம் இவ்விடயத்தில் அரச அதிபர் காட்டுகின்ற அக்கறை போல் பிரதேச செயலர்களும் கிராம அலுவலர்களும் அக்கறை கொண்டால் விரைவாக கட்டுப்படுத்தலாம். வரம் தரும் ஈஸ்வரா பிரதேச செயலர்கள் இதற்கு உடன்படுவார்களா? உனக்கே வெளிச்சம்.



த.தயானினி, நீர்வேலி.

---

**உங்கள் கேள்விகளை முதல்வன் சஞ்சிகை ஆவலுடன் எதிர்பார்க்கிறது உங்கள் கேள்விகளிற்கு நெருப்பன் சூடான பதிலை அளிப்பான் எனவே உங்கள் கேள்விகளை எமது அலுவலகத்திற்கு விரைவாக அனுப்புங்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி
"முதல்வன்"
பிரதம ஆசிரியர்
**வே.தவச்செல்வம்**
ஒருதானை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறது அடுத்த பனியுகம்

அடுத்த பனியுகம் 1500 வருடங்களுக்குப் பின்னரே ஏற்படுமென எதிர்பார்ப்பதாகவிஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காபனீரொட்சைட் வாயு வெளியேற்றத்தின் தொடர்ச்சியான அதிகரிப்பினால் பூமியின் வெப்பநிலை அதிகரித்ததே இதற்கான பிரதான காரணமாகும்.

புவிமேற்பரப்பானதும் சூழலானதும் வெப்பநிலை நீண்டகால அடிப்படையில் குறைவடைந்து வருகின்றமையானது பனிப்படலங்களினதும் பனிக்கட்டிகளினதும் உருவாக்கத்திற்கு வழிவகுப்பதே பனியுகக் காலமாகும்.



பூமி சுமார் 5 வகை பனியுகங் களைச் சந்திக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 10,000 - 15,000 வருடங்களாக பூமி வெப்ப யுகத்திலேயே இருந்து வருகின்றமையால் இவ் வெப்பயுகம் எப்போதும் முடிவுக்கு வருமென்பதை மிகச் சரியாகக் கணிப்பிட முடியாது இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், காபனீரொட்சைட் வாயு வெளியேற்ற வீதம் தொடர்ச்சியாகக் குறைவடையும் பட்சத்தில் அடுத்த 1500 வருடங்களுக்குள் பனியுகம் ஆரம்பமாகுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான ஆய்வு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம், புளோரிடா மற்றும் நோர்வே பல்கலைக்கழகங்களின் அறிஞர்களினால் புவியின் சுற்றுவட்டப் பாதையில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் பாறை மாதிரிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது,

பனியுகத்திற்கான காரணிகள் முழுமையாகவே புரிந்து கொள்ளப்படாவிடினும் சூழலில் மெமேன் மற்றும் காபன் மையொக்செட் ஆகியவற்றின் அதிகரிப்பும் சூரியனைச் சூழவுள்ள பூமியுள்ள பூமியின் சுற்றுவட்டப்பாதையில் ஏற்படும் மாற்றங்களும் இதற்கான காரணங்களாகக் கருதப்படுவதுடன் டெக்டோனிக் தட்டுக்களின் அசைவும் இதற்குப் பங்களிப்பு வழங்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

காபனீரொட்சைட் வாயு வெளியேற்றம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதன் மூலம் பூமியின் வெப்பநிலை அதிகரிப்பானது தீவிர காலநிலை மாற்றம் கடல் மட்ட அதிகரிப்பு உள்ளிட்ட அச்சுறுத்தல்களைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வெப்பநிலை அதிகரிப்பை 2 பாகை செல்சியஸுக்குள் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் பூமி மிகப் பாரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்

இந்நிலையில் கடைசி பனியுகக் காலம் 11,500 வருடங்களுக்கு முன் முடிவடைந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளன அதேவேளை, அடுத்த பனியுகத்தின் ஆரம்பத்தை சரியாகக் கணிப்பிடும் பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

## உலக அதிசயங்கள்

| | | | |
|---|---|---|---|
| தாஜ்மகால் | - இந்தியா | | |
| மாபெரும்சுவர் | - சீனா | சாய்ந்த கோபுரம் | - இத்தாலி |
| பிரமிட்டு | - எகிப்து | தொங்கு தோட்டம் | - பபிலோனியா |
| சுதந்திரசிலை | - அமெரிக்கா | நயாகரா நீர்வீழ்ச்சி | - வடஅமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்காக இந்திராகாந்தி

"இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்'' என்று, தெளிவாகப் புரியும்படி கோரிக்கைக் கடிதத்தை மன்மோகன்சிங்கிற்கு, கருணாநிதி அனுப்பினார், இதற்கு பிரதமர் அனுப்பிய பதில் கடிதத்தை நூறுதடவை படித்தாலும் புரியவில்லை! உங்களுக்காவது புரிகிறதா எனப்பாருங்கள்.

"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ளதீர்மானத்தைப் பொறுத்த மட்டில் முன்னோக்கியதும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே மோதலையும் அவநம்பிக்கையையும் ஆழப்படுத்துவதற்கு மாறாக, பொறுப்பு நிர்ணயித்தல் மற்றும் சமரசம் தொடர்பான பிரச்சினைகளில் முன்னெடுத்துச் செல்லும் வழியைக் காண்பதை உறுதிசெய்வதும் ஆன முடிவை அடைவதற்கான முயற்சியில் நாம் அனைத்துத் தரப்பினருடனும் தொடர்புகொண்டுள்ளோம்! என்று முடித்திருக்கிறார் பிரதமர் ஆனால் தமிழக மக்கள் மத்தியிலும் கொடுத்த குரலின் காரணமாக வேறு வழியில்லாமல் இறங்கிவரவேண்டிய நிலைக்கு மன்மோகன் தள்ளப்பட்டார். ''இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவே இந்தியா விரும்புகிறது" என்பது மன்மோகனின் இன்றைய நிலைப்பாடு, சொன்னது மாதிரியே ஆதரித்து வாக்களித்துள்ளது. இந்தியா, ஆனால் இத்தகைய முயற்சிகளை இந்தியாதான் செய்திருக்க வேண்டும். இதுவரை இந்தியா மௌனமாக இருந்ததே பெரும்தவறு. இப்போதும் இந்த முடிவையும் வேறு வழியில்லாமல்தான் எடுத்துள்ளது. காங்கிரஸ் அரசு, இப்படி ஒரு முடிவு எடுப்பதைத் தவிர்க்க எத்தனையோ சால்ஜாப்புக்களை காங்கிரஜ் அமைச்சர்கள் செய்தார்கள்.

தமிழக அரசியற் கட்சிகள் வரலாற்றின் முதல் முறையாக இலங்கை விவகாரத்தில் ஒன்று சேர்ந்து இருக்கிறார்கள். ஐ.நா.சபையின் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஏற்கவேண்டும். என்பது தான் இந்தக் கட்சிகளின் முழு முதல் கோரிக்கை. இதைத் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகனும் வழிமொழிந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. மக்களவை, மாநிலங்களவை இரண்டிலும் எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து கோரிக்கை வைத்தன.



இதற்கு பதில்சொல்ல முன்வந்த நிதிஅமைச்சர் பிரணாப்முகர்ஜிக்கு இந்தியாவின் வரலாறே தெரியவில்லை. குறிப்பாக, ஜவஹர்லால் நேரு என்று ஒருவர் இருந்தது அவருக்குத் தெரியுமா என்றே தெரியவில்லை.

"குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டுக்கும் எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பது இல்லை என்பதுதான் இந்தியாவின் பாரம்பரிய நிலைப்பாடு" என்று பிரணாப் சொல்லி இருக்கிறார்.

உலகில் எங்கெல்லாம் அடக்கு முறையும் ஒடுக்குமுறையும் நடந்திருக்கிறதோ, அங்கெல்லாம் இந்தியா தனது கண்டனத்தை பதிவுசெய்து வந்திருப்பதுதான் பாரம்பரிய நிலைப்பாடு!

"யூதர்களின் மீது இனப்படுகொலையை நடத்திய ஹிட்லரைக் கண்டிப்பதில் முதல் ஆளாக இருந்தவர் காந்தி" "மனித குலத்திற்காக ஒரு போர் நடத்தலாம் என்றால், ஓர் இனத்தை படுகொலை செய்கிற ஹிட்லரை ஏதிர்த்துப் போர் செய்வது முற்றிலும் நியாயமானதே என்றார் அவர். உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து இருக்கிறது. எகாதிபத்தியவாதிகளும் பாசிஸ்களும் ஓர் அணியில் இருக்கிறார்கள், சோஷலிஸ்டுகளும் தேசியவாதிகளும் எதிர் அணியில் இருக்கிறார்கள் பாசிசத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கிற உலகம் முற்போக்கு சக்திகளுடன் நாம் சேர்ந்திருக்கிறோம்" என்று லக்னோ காங்கிரஸில் பகிரங்கமாக அறிவித்தார் நேரு,

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அமெரிக்கா - சோவியத் என உலகம் இரண்டு குழக்களாகப் பிரிந்த போது இந்தியா அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அப்போதும் பிரதமர் நேரு, பாசிசம், காலனியம், இனவெறி, ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நாங்கள் எதிர்க்கின்றோம் என்று சொன்னார். இந்தோனேசியாவில் டச்சு அரசாங்கம் படைகளைக் கொண்டு குவித்தபோது, எதிர்த்தார் நேரு. அதற்குப்பிறகுதான் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலே தலையிட்டது. வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் மோதல் ஏற்பட்டபோது, போரை நிறுத்த இந்தியா கடுமையாக முயற்சித்தது. போர்க் கைதிகளின்பரிவர்த்தனைக்கு நடுநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் கமிசன் நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஜெனரல் திம்மையா இருந்தார். அமெரிக்கா, சோவியத், சீனா ஆகிய மூன்று நாடுகளையும் பகைத்துக் கொண்டு எடுத்தமுடிவு இது சீனா - பிரெஞ்சு காலனிப்படைகளுக்கும் வியட்நாம் புரட்சிக்காரர்களுக்கும் நடந்த போரை முடிவுக்குக் கொண்டுவர நம்முடைய நாட்டைச் சேர்ந்த கிருஸ்ணமேனனின் ஆறு அம்சத்திட்டம் பயன்பட்டது.

சூயஸ் கால்வாயை எகிப்து நாட்டுடமை ஆக்கியபோது, பிரிட்டனும் பிரான்சும் அந்த நாட்டின்மீது படையெடுத்தன. இது ஆக்கிரமிப்பு என்று நேரு கண்டித்தார். பெல்ஜியத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற காங்கோ உள்நாட்டுப் போரை நிறுத்தியது, இந்திய இராணுவம் சீனாவை, ஜப்பான் ஆக்கிரமித்தபோது, இந்தியா கண்டித்தது. மக்கள் சீனக்குடியரசு அமைக்கப்பட்டபோது இந்தியா தான் அதை முதலில் அங்கீகரித்து ஐ.நா.சபையில் மக்கள் சீனாவிற்கு இடம் அளிக்க வேண்டும் என்று வாதிட்ட நாடும் இந்தியா தான் சீனா, திபெத் நாட்டை ஆக்கிரமித்தபோது இந்தியா கண்டித்தது. தலாய்லாமா ஆயிரக்கணக்கான கைதிகளுடன் இந்தியா வரஅனுமதித்தது. இப்படித் தொடர்ச்சியாக ஏகாதிபத்தியத் தன்மைகளுக்கு எதிராகப் போராடிய பாரம்பரியம் இந்தியாவுக்கு உண்டு.

கிழக்கு பாகிஸ்தானில் எற்பட்ட அரசியல் நெருக்கடியில் துணிச்சலான முடிவுகளை இந்திரா எடுத்தார். இராணுவ ஆட்சியில், வங்க மொழி பேசும் கிழக்கு பாகிஸ்தான் மக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டார்கள். பலரும் கொல்லப்பட்டார்கள். சுமார் ஒருகோடி மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தார்கள். ஜெனரல் அரோரா தலைமையில் இந்திய இராணுவத்தை கிழக்கு பாகிஸ்தானுக்குள் விட்டார். இந்திரா. 93ஆயிரம் வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தார்கள். வங்காளதேசம் என்ற நாடு உருவானது. அமெரிக்காவையும் சீனாவையும் எதிர்த்தே எடுக்கப்பட்ட நடவடிக்கை இது இந்தப் பின்புலத்தில்தான், இலங்கையில் நடப்பது உள்நாட்டுப்பிரச்சினை அல்ல. அது இனப்படுகொலை என்று இந்திய நாடாளுமன்றத்திலேயே பிரதமர் இந்திரா அறிவித்தார்.

உள்ளூர்த் துப்பாக்கிகளையும், தங்களுக்குத் தெரிந்த தொழில்நுட்ப அறிவுடன் தயாரிக்கப்பட்ட வெடி குண்டுகளையும் வைத்து இலங்கை இராணுவத்துடன் போராடிக் கொண்டிருந்த நவீன போராளி அமைப்புகளுக்கு நவீன ஆயுதங்களையும், உயர்தரப் பயிற்சிகளையும் கொடுத்தது. இந்திராதான். தமிழ்நாட்டின் பல்வேறு மலைப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் பயிற்சி எடுத்துக்கொண்டது, பகிரங்கமாக இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன்தான் என்பது இன்றைய இளைய தலைமுறை பலருக்கும் தெரியாது. யாழ்ப்பாணத்துக்குள் தடையை மீறி ஹெலிகாப்டரை அனுப்பி உணவுப் பொட்டலங்கைப் போட்டவர் ராஜீவ் காந்தி, தமிழர்களின் உரிமையைக் காக்க ஜெயவர்த்தனாவுக்கு எதிரில் உட்கார்ந்து கையொழுத்துப் போட்டவர். "அணுஆயுதங்களை 2010ஆம் ஆண்டுக்குள் தடைசெய்யவேண்டும்" என்று ஐ.நா. பொதுச்சபையில் பேசியவர். தென்ஆபிரிக்க நிறவெறியை எதிர்த்தவர். நிறவெறி கொண்ட அந்த நாட்டுடன் வர்த்தகம் கூடாது என்ற முடிவெடுத்த நாடும் இந்தியாதான், இப்ப வர்த்தகம் செய்யாத ஆபிரிக்க அரசுகளுக்கு உதவ ஆபிரிக்க நிதி திரட்ட வேண்டும் என்று அறிவித்தவரும் ராஜீவ்தான். தென்ஆபிரிக்காவில் இருந்து விடுதலைபெறப் போராடிய நமீபியாவின் ஸ்வாபோ இயக்கத்தை இந்தியா ஆதரித்தது. நமீபியா விடுதலை அடைந்தபோது, தான் பிரதமராக இல்லை என்றாலும், ராஜீவ் அந்த விழாவில் பங்கேற்றார். கம்போடியாவை வியட்நாம் ஆக்கிரமித்தபோது. இந்தியா எதிர்த்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் இதற்கான முயற்சி எடுத்தார். வியட்நாம் இராணுவம் இறுதியில் வெளியேறியது.

இப்படி நேருவும், இந்திராவும், ராஜீவும் தங்களுக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு, அதற்கு எதிரான நாடுகளைக் கண்டிக்கவும் தண்டிக்கவுமான முயற்சிகளில் தொடர்ந்து இயங்கி வந்திருக்கிறார்கள் எந்த ஒரு நாட்டுக்கு எதிரான தீர்மானத்தையும் இந்தியா ஆதரித்தது. இல்லை என்று எஸ்.எம். கிருஸ்ணா சொன்னது. நம்முடைய பாரம்பரிய குணாம்சத்துக்கே எதிரானது, அநியாயம் எங்கே நடக்கிறதோ அங்கெல்லாம் நான் தேன்றுவேன்என்ற கிருஸ்ணரின் கீதாஉபதேசமே நம்முடைய பாரம்பரியம். "சொந்தச் சகோரர்களே தவறு இழைத்தாலும் தண்டனை கொடு" என்று உபதேசித்தான் கிருஸ்ணன். மகாபாரதக்கதையில் மட்டுமல்ல.. மாகவம்சக் கதையில் கூட நாம் பாடம் கற்கத் தயாராக இல்லை என்றால் பழியும் பாவமும் யாருக்கு?

நன்றி
யூனியர் விகடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பக்கம்

# முயற்சி திருவினையாக்கும்

## அம்புலி மாமா கதை

பழுவூரை ஆண்டு வந்த மன்னர் கிருஷ்ணபூபதி தன் குடிமக்களின் நலனில் கண்ணும் கருத்துமாய்இருந்து வந்தார். அவருடைய பட்டத்து ராணியான ஜோத்சனா சிறந்த அறிவாளியாக திகழ்ந்தாள். ஒரு முறை ராணி அவரிடம் மக்களின் நலனை மந்திரிகளின் வாயிலாக அறிவதை விட தானே நேரில் சென்று கண்டறிவது சிறப்பானது என்றும் அதற்காக இரவு நேரங்களில் மாறுவேட மணிந்துமக்களோடு கலந்து பழகி அவர்களுடைய குறைகளை அவர்கள் வாயிலாகவே அறிவதை விடதானே நேரில் சென்று க்ண்டறிவது சிறப்பானது என்றும் அதற்காக இரவு நேரங்களில் மாறுவேட மணிந்து மக்களோடு கலந்து பழகி அவர்களுடைய குறைகளை அவர்கள் வாயிலாகவே கேட்டறிய வேண்டுமென அறிவுரை பகன்றான். அது சரியென்று தோன்றவே மன்னர் அன்று முதல் மாறு வேடமணிந்து நகர்வலம் வரத் தொடங்கினார்.

ஒரு நாள் இரவில் மன்னர் முனிவர் போல் வேடமணிந்து நகர்வலம் வருகையில் சத்திரத்தின் வாயிலில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்த ஒரு தம்பதியைப் பார்த்தார். உடனே தன் குதிரையை விட்டு இறங்கிய மன்னர் அவர்களுடைய உரையாடல் செவிகளில் விழும் தொலைவில் அமர்ந்து கொண்டார் நாம்தலைநகருக்கு வந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. கையிலிருந்த பணமும் செலவாகி விட்டது. இன்னமும் உங்களால் மன்னரை சந்திக்கவே முடியவில்லை. அப்படியே சந்தித்தாலும் என்ன இலாபம் என்று எனக்கு தெரியவில்லை. உங்களுக்கு தெரிந்த ஒன்றேயொன்று கதை சொல்வது மட்டும்தான்! அந்த திறமைக்கு மன்னர் அள்ளிக் கொடுப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்டாள். அந்த நபரின் மனைவி!

அதைக் கேட்ட அவர் புக்ககையுடன் வேறு யார் அதை பாராவிட்டாலும் மன்னர் கிருஷ்ணபூபதி கட்டாயம் இரசிப்பார்.! அவரை மட்டும் ஒருமுறை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் போதும்! அதன் பின்பு என்கதை சொல்லும் திறமையினால் அவரை கட்டாயம் மகிழ வைத்து விடுவேன்! இப்படித்தான் ஒரு நாவிதன் ஒரு நாட்டு மன்னரை சந்திக்க முயன்று வெற்றி பெற்றான். அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளை கதையாக கூறுகிறேன். கேள்! என்று அவர் சொல்லிவிட்டு கதையை கொடங்கினார்.

பல ஆண்டுகளுக்கு முன் கங்கைபுரியில் சுந்தரம் என்று ஒரு நாவிதன் வசித்து வந்தான். முடி திருத்துவதை வெறும் கடமையாக மட்டும் கருதாமல் அதை ஒரு கலையாக பாவித்தான். அந்தக் கிராமத்தில் அனைவரும் சுந்தரத்திடம் தான் முடி திருத்திக்கொள்ளவா!



ஊரிலுள்ள அனைவரும் அவனை பாராட்டுவதை கண்டு நாளடைவில் அவனுக்கு ஓர் ஆசை துளிர்விட்டது. தனது ராஜ்யத்தின் மன்னருக்கே முடி திருத்தும் வாய்ப்பு கிடைத்தால் மன்னர் அகமகிழந்து போய் தன்னை ஆஸ்தான நாவிதான ஆக்கிவிடுவார் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அதனால் ஒருநாள் தன் மனைவியுடனும் பிள்ளையுடனும் தலைநகரை அடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவன். மன்னரிடம் என் திறமையை காட்ட விரும்புகிறேன். தயவு செய்து மன்னரை சந்திக்க என்னை அனுமதியுங்கள் என்று கெஞ்சினான். அவனுடைய வேண்டு கோளை கேட்ட காவலர்கள் அவனை ஏளனம் செய்து திருப்பியனுப்பி விட்டனர். ஆனால் சுந்தரம் தன் முயற்சியை கைவிடவில்லை. தினமும் அரண்மனை வாயிலில் மணிக்கணக்காக நின்று பலமுறை காவலர்களை கெஞ்ச ஆரம்பித்தான்.

ஆனாலும் அவர்கள் மசியவில்லை. ஒரு நாள் அவர்களில் ஒருவன் ஏன் தம்பி வீணாக இங்கு வந்து தினமும் என் நேரத்தை வீணாக்குகிறாய்? மன்னருக்கு ஏற்கனவே ஒரு ஆஸ்தான நாவிதன் இருக்கின்றான்.

அவன் பெயர் மாதவன் அவனை தவிர மன்னர் யாரிடமும் முடிதிருத்திக் கொள்ளமாட்டார். அதனால் நீ இங்கு வந்து நின்று கொண்டு எங்களை கெஞ்சிப் பயனில்லை என்றான். தன் முயற்சியில் சற்றும் தளராத சுந்தரம் உடனே மாதவனின் முகவரியை கேட்டு தெரிந்து கொண்டதுடன் அவனை பற்றிய விபரங்களையும் சேகரித்தான். மாதவன் அறுபது வயதுக் கிழவன் என்றும் அவனுக்கு பிள்ளை குட்டிகள் கிடையாது என்றும் தெரிந்து கொண்டான். உடனே தன் மனைவியுடன் கூடிப் பேசி ஒரு திட்டம் தயரித்தார். அதன்படி தன் மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு மறுநாளே மாதவனை தேடி சென்றான். அந்த சமயம் மாதவன் தன் வீட்டு வாயிலில் கொய்யா மரத்தினடியில் அமர்ந்திருக்க அவன் மனைவி சமையலுக்கு காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். எவ்வித தயக்கமுமின்றி உள்ளே நுழைந்த சுந்ரதரம் அப்பா! சௌக்கியமா? என்று குசலம் விசாரித்து கொண்டே மாதவனின் அருகில் அமரசுந்தரத்தின் மனைவி அத்தே! மருமகள் நானிருக்க நீங்கள் ஏன் காய்நறுக்க வேண்டும்? என்று அந்த வேலையை தான் செய்யத் தொடங்கினாள். சுந்தரத்தின் சிறுபிள்ளை அப்பா! எனக்கு இந்த மரத்திலிருந்து கொய்யாப்பழம் பறித்துத் தா! என்று அடம்பிடிக்க தொடங்கினான். இன்னொருத்தர் வீட்டில் வந்து இப்படியெல்லாம் கேட்டகக்கூடாது என்று சுற அந்தச் சுட்டிப் பையன இது இன்னொருத்தர் வீடு இல்லை! என் தாத்தாவின் வீடு! என்று ஒரு போடு போட்டான். தன்னைத் தாத்தா என்று அந்த சிறுபிள்ளை சொ தும் கொண்டாடியதும் மாதவன் அந்தச் சிறுவனை கட்டியணைத்துக் கொண்டான்.

பிள்ளை பாக்கியம் அற்ற மாதவன் தம்பதி சுந்தரத்தை தங்கள் மகனாகவும் அவன் மனைவியைதங்கள் சொந்த மருமகளாகவும் நடத்த ஆரம்பித்தனர். தவிர சுந்தரமும் முடிதிருத்தும் தொழில் செய்கிறான் என்று தெரிந்ததும் மாதவனுக்கு அவனிடம் நெருக்கம் அதிகரித்தது. சில நாட்களிலேயே மன்னருக்கு முடி திருத்தச் செல்லும் போது மாதவன் தன்னுடன் சுந்தரத்தையும் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான்.

ஒருநாள் தற்செயலாக மாதவனால் செல்ல முடியாமல் போக சுந்தரத்திற்கு தன் திறமையை காட்ட வாய்ப்பு கிடைத்து விட்டது. மாதவனுக்கு பின்பு அவனே ஆஸ்தான நாவிதனாக மாறினான். ஆனால், மாதவன் தம்பதியை தங்களுடனே வைத்துக் கொண்டு பராமதிக்கவும் செய்தான்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திய அவர் ஒருவனுக்கு திறமையும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் அவன் எடுத்த காரியத்தில் நிச்சயம் வெற்றி பெறுவான். அந்த அரிய குணங்கள் என்னிடமும் உள்ளன. அதனால் நானும் என் திறமையை காட்டி மன்னலை மகிழ்விப்பேன் என்றும் உறுதியாக நம்புகிறேன் என்றார். பின்பு அவர் தனது உரையாடலை சற்றுதொலைவில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மன்னரை சுட்டிக்காட்டி அதோ உட்கார்ந்து இருக்கிறாரே அவரும் நான் கூறியதை கேட்டிருப்பார்! யார் கண்டது? அவரே ஒருக்கால் மன்னரிடம் சிபாரிசு செய்யலாம்! என்றார்.

அதைக் கேட்ட மன்னர் தனது மாறு வேடத்தை கலைத்துவிட்டு அந்த நபரிடம் விரைவிலேயே மன்னரை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்கு கிட்டும் என்று கூறிப் புன்னகையுடன் வெளியேறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரத்தும் நிழல்களின் உக்கிரம்

## சித்தாந்தன் கவிதைகள்

-கருணாகரன்-



'காலையின் ஒலிகளை
கவிதைகளாய் என்னிடம் விட்டுப்போகும்
பறவைகளுக்குத் தெரிவதில்லை
மாலைச் சூரியனின் அந்திம ஒளியில்
எனது மாபெருங் கவிதைகளிலும்
குருதி படிந்து போவதை.......'
(செந்தவனின் விம்பமான நாள்)

'தெரு மரங்கள்
சவத்துணி போர்த்தியுள்ளன
இரவுகள்
நாய்களின் குரல்வழி அவரமுறுகின்றன'
(மூடுண்ட நகரத்தில் வாழ்பவனின் குறிப்பு)

'ஒரு கத்தியிலோ
உடைந்த கண்ணாடித் துண்டுகளிலோ
சவரம் செய்து வீசிய பிளேடுகளிலோ
வெட்டியெறிந்த நகத் துண்டுகளிலோ
எல்லாவற்றிலும்
ஒட்டியிரக்கிறது மரணத்தின் நெடி'
(சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் மரணம்)

'மகா ஜனங்கள் அழுதார்கள்
அரனின்
தூசி படர்ந்த சப்பாத்துகளின் கீழே
ஆயிரமாயிரம் கபாலங்கள்'
(மகா ஜனங்களின் அழுகை அல்லது அரசர்களின் காலம்)

சித்தாந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுதியான 'துரத்தும் நிழல்களின் யுகம்' நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் சிலவற்றில் உள்ள அடிகள் இவை. முப்பது கவிதைகளையுடைய இந்த நூலில் பெரும்பாலானவையும் யுத்தக் கவிதைகள் அல்லது யுத்தம் பற்றிய கவிதைகள். அல்லது யுத்த காலக் கவிதைகள். அல்லது சித்தாந்தனின் வாழ்க்கை கவிதைகளாகவே உள்ளன. இந்தக் கவிதைகளில் உள்ள பெரும்பாலான அடிகளிலும் யுத்தத்தின் உக்கிரம். சனங்களின் அவலம். இரத்தத்தின் நெடில், வாழ்க்கையின் இழப்பு, அச்சத்தின் பயங்கரம் காலத்தின் துயர் ஆகியனவே இரக்கின்றன. ஆகவே இது ஒரு யுத்தக் கவிதைகளின் தொகுதியாகவே நமது மனதில் பதிவாகின்றது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட பெரும்பாலான ஈழக்கவிதைகள்க விடுதலை வேட்கையையும், அந்த வேட்கையுடனான போராட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தன அல்லது அவற்றில் மையமிட்டிருந்தன. ஆனால் இப்போது எழுதப்படும் கவிதைகள் யுத்தத்தின் கொடுமையை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சனங்களின் அவலத்தை, யுத்தப் பிரபுக்களின் பயங்கர யுகத்தைப் பேசுவனவாக உள்ளன. இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம், காலம் எப்படி உருத்திரிந்திருக்கிறது என்பதற்கான சாட்சியமாக இந்தக் கால வெளியின் படைப்புகளே இருக்கின்றன. கடந்த முப்பதாண்டு கால ஈழ அரசியற் செயற்பாடுகளின் தீவிரம் தவிர்க்க முடியாமல், எல்லாத்தளங்களிலும் எல்லா அம்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அரசியல் சாதாரணமானதாக இருக்கவில்லை என்பதே இதன் பொருள்.

சித்தாந்தனின் கவிதைகள் பெரும்பாலும் இந்தப் பின் புலத்தையே, இந்த உண்மைகளையே சொல்கின்றன. குறிப்பாக அதிகாரத்துக்கெதிரான குரலாக, அதிகாரச் சூழலில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமலும் அதேவேளை அது தொடர்பான எச்சரிக்கையோடும் உள்ள நிலைமையில் இந்தக் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர்க்க முடியாமல். தீவிர அரசியற் கவிதைகளாகவே இருக்கின்றன. இந்தத் தீவிரம் என்பது 'சீரியஸ்' என்ற அர்த்தத்தையுடையது.

சித்தாந்தனின் கவிதைகளிலுள்ள முக்கிய அம்சம் அல்லது சிறப்பென்பது அவரின் வெளிப்பாடாகும். வசீகரமான மொழிதல். மொழியைக் கையாள்வதிலுள்ள ஆற்றல், நுட்பமான சித்திரிப்புகள், தீவிரத் தன்மை கொள்ளும் கொந்தளிப்பு, இந்த மாதிரியான வெளிப்பாட்டாற்றல் நமது சூழலில் இரண்டு கவிஞர்களிடம் இருக்கின்றன. ஒன்று சித்தாந்தனிடம் இன்னொன்று எஸ் போஸ் என்ற சந்திரபோஸ் சுதாகரிடம் இதைத் தவிர்த்து இன்னொருவரை அடையாளங் காணுவதெனில் அது தானா விஷ்ணு எனலாம். (தானா விஷ்ணுவின் அண்மைய கவிதைகள்)

முக்கியமாக இவர்கள் அதிகாரத்துக் கெதிரானவர்கள், அதிகாரமே இவர்களுக்குப் பிரச்சினை, அதுவும் சகிக்க முடியாப் பிரச்சினை எனவே அந்தப் பிரச்சினை உருவாக்கும் சினத்திலிருந்து, அந்தச் சினம் உண்டாக்கும் கொந்தளிப்பிலிருந்தே இவர்களுடைய கவிதைகள் உருவாகின்றன. அப்படி உருவாகும் கவிதைகளுக்கான மொழியும்கூட அந்தச் சூழலின், அந்த நிலைமைகளின் மொழி தான்.

நெருக்கடிக் காலத்தின் மொழிக்கு எப்போதும் கடும் வீச்சும் சூடும் இருக்கும். தமிழகத்தில் இதற்குச் சிறந்த உதாரணம் ஆத்மாநாம் சிரியாவில் நிஸாக் கப்பானி, பலஸ்தீனத்தில் மஹமுட்தர்விஸ், றிஷீட் ஹுசைன், சமீஹ் அல்காசிம் போன்ற பலர் இன்னும் ஆபிரிக்காவில் கேபிரியல் ஒகாரா, டேவிட் டியோப், கிறிஸ்தோபர் ஒகிப்போ, செங்கோர், க்வெஸிப்றா, டெனிஸ்ப், நூற்றல் என்று பல அடையாளங்கள் உண்டு.

சித்தாந்தன் தன்னுடைய காலத்தின் பயங்கரங்களையும் அவலங்களையும் அச்சுறுத்தல்களையும் சொல்கிறார். ஒன்று இவை குறித்த வெளிப்பாடு, அடுத்தது இவற்றுக்கான எதிர்வினை, ஆகவே பயங்கரநிலை. அவலம், துயரம், அச்சுறுத்தல்கள் பற்றிய பதிவாகவும் இவற்றுக்கெதிரான எதிர்ப்புக் குரலாகவும் இந்தக் கவிதைகள் இருக்கின்றன.

'எங்கள் தெருக்கிளில் குழந்தைகளைக்
காணவில்லை
குழந்தைகளின் கனவுகளை மதித்துக் கொண்டு
இராணுவ வாகனங்கள் செல்கின்றன'

(தெருக்கள் இழந்த குழந்தைகளின் துயர்)

இது ஒரு சூழ்நிலையின் பதிவு. உண்மை யதார்த்தம் இந்தக் கவிதை இந்தச் சூழலை

'குழந்தைகளின் உலகங்களின் அற்புதங்களை
ஆயுதங்கள் தின்னத் தொடங்கிவிட்டன'

என மேலும் விவரித்துச் செல்லும் இந்தக் கவிதை சிறுவர்களின் உலகம் பறிக்கப்பட்டதை சிதைக்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது. அதுவும் எளிமையாக.

'சுண்டல்காரன் வெறுமனே கூவித்திரிகிறான்
ஐஸ்பழவான்கள் தரிக்காது செல்கின்றன
தெருநாய்கள் அச்சமற்றுத் திரிகின்றன
லான்மாஸ்ரர்களைத் துரத்திச் சென்று ஏற
எவருமில்லை
.................................
இராணுவ வாகனங்களின் புகை
மரங்களில் இருளாய்ப் படிந்திருக்கிறது

என்கிறது இங்கே வெளிப்படையாக ஒரு முரண் தென்படுகிறது.

சிறுவர்கள் நடமாடுவதற்கு அச்சுறுத்தலாக இருக்கும் தெருவில் ஏனையவர்களினதும் ஏனையவற்றினதும் நடமாட்டம் இருக்கிறது. வண்டிகள் ஓடுகின்றன. சுண்டல்காரன், ஐஸ்பழ வியாபாரிகள் எல்லாருமே திரிகிறார்கள். ஆனால் சிறுவர்கள் இல்லை. இது முரண் அல்ல. இது தான் உண்மை. யதார்த்தம் என்று சொன்னோமே அது.

இயல்பு போல காட்டப்படும் தன்மைக்குள்ளிருக்கும் இயல்பில்லா (உண்மை) நிலை, வெளியே இயல்டபாகத் தோற்றம் காட்டும் உலகம். ஆனால், உள்ளே அப்படி இல்லை என்பதைச் சித்தாந்தன் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறார். ஆனால். இந்தக் கவிதை மிகச் சிறப்பாக வளர்ந்து சென்று முடிவில் சிதைந்து விடுகிறது அல்லது குழம்புகிறது.

'விரைந்து செல்லும் இராணுவ வாகனங்களின்
இரைச்சல்களுக்கிடையில் கேட்கிறது
தன் குழந்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வண்டிக்குள் காவு கொடுத்த
தாயின் ஒப்பாரி'
குழந்தைகள் தெருவுக்கு வரமுடியாத போது எப்படி நிகழும் தெருவில் இராணுவ வண்டியின் கீழ் நிகழும் மரணம்? தவிரல இதற்கு முதல் அடிகள் இப்படி அமைகின்றன. குழந்தைகளின் சுவடுகள் தொலைந்த தெருக்களில் இராணுவத் தடங்கள் பெருகிக் கிடக்கின்றன என.

ஆனாலும் சிந்தாந்தனின் கவிதைகள் செயிப்பாட்டின் நவீனத்துவங்களைக் கொண்டு, நுண்ணம்சங்களையும் துலக்குகின்றன.

'காலம்
ஒரு கனியாக வாய்க்கவில்லை நமக்கு
அழுகலின் மணம் எம் தூக்கத்தை விரட்டுகிறது
.......................
ஒரு கனியை
எம் பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியுமானால்
ஆத்மார்த்தமான அந்தக் கணத்தில்
பறவைகளுக்கு மேலும் ஒரு சோடிச் சிறகுகளைப்
பரிசளித்த மகிழ்வில் திளைப்போம்'
(மூடுண்ட நகரத்தில் வாழ்பவனின் குறிப்பு)

இப்படிக் கவித்துவம் கூடிவரும் இடங்கள் அதிகம், நம் காலத்தின் முக்கியமான கவிஞர்களில் - கவியாளுமைகளில் சித்தாந்தன் முக்கியமானவர். அவர் இப்படி முதன்மையடைவது அவருடைய வெளிப்பாட்டினாலும், அவர் கொண்டிருக்கும் கலக மனத்தினாலுமே, குறிப்பாக சனங்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதே சித்தாந்தனின் சிறப்பு. அதுவே அவருடைய அடையாளம், சனங்களில் ஒருவராக இருப்பதன் மூலம் இந்த அடையாளமும் இந்த அடையாளத்திற்குரிய மனநிலையும் அவலைர வந்தடகின்றன.

இல்லையென்றால்,
'எல்லாப் பாதைகளும் திருப்பங்களில் முடிகின்றன
ஒப்பாரிகளும் விசும்பல்களும்
ஓலங்களினாலுமான நகரத்தில்
வெறும் பிரார்த்தனைகளுடன் வாழுகின்றோம்'
(கடவுள்களின் நகரங்களில் வாழுதல்)

எனறு எப்படி எழுத முடியும்.
சித்தாந்தன் எந்தத் தரப்பினையும் ஆதரிக்கவும் இல்லை நியாயப்படுத்தவும் இல்லை. அவர் நம்பிக்கை கொள்வதற்கு எந்தச் சமிக்ஞைகளும் தெரியவும் இல்லை. ஆனால் வாழ்க்கை நம்பிக்கையற்று இருக்கவும் முடியாது. அவருடைய நம்பிக்கைகள் சக மனிதர்களிடமும் வரலாற்றிடமுமே இருக்கின்றன. இதேவேளை சனங்கள் தங்களுக்கு முன்னே எழுகின்ற பிம்பங்களால் கவரப்படுவதையும் அந்தப் பிம்பங்களாலேயே மக்கள் பலியாவதையும் சுட்டி எச்சரிக்கின்றார்.

'மகா ஜனங்கள்
வார்த்தைகளை நம்பப் பழகிவிட்டார்கள்
தெருக்களில் அலைகின்றன
எல்லா நாட்களிலும் நம்பிக்கையூட்டலுக்குரிய
வார்த்தைகள்
அனோஜ்
வார்த்தைகளை நம்பாதே'
(மகா ஜனங்களின் அழுகை அல்லது அரசர்களின் காலம்)

'வேண்டாம்
கொடும் இரவுகளில் புனையப்பட்ட
பிணக்கறைகளில் இருந்து
ஒரு பூ பூக்குமென்றோ
அதன் நடனமிடும் விழிகளில்
சூரியன் உதிக்குமென்றோ
யாருமே நம்ப வேண்டாம்'
(புனைவுக் காலத்தினுள் அமிழ்ந்த உண்மை முகம்)

பொதுவாகச் சித்தாந்தனின் கவிதைகள் பொய்மைகள், பனைவுகள் குறித்த உலகத்தையிட்ட கசப்புடனும் அதையிட்ட எச்சரிக்கையுடனும் உள்ளதையும் உணர முடிகிறது. இதற்கு இந்தத் தொகுதியிலுள்ள முப்பது கவிதைகளில் பெரும்பாலானவையும் ஆதாரம்.

கவிதைகளின் தலைப்புகள்

01. பிடாரனின் திகைப்பூட்டும் கனவுகளிலிருந்து நான் தப்பிச் செல்கிறேன்.
02. இருளுக்குள் வதைபட்டுச் சிதைகிற ஒளி ஓவியம்.
03. புனிதத்தின் உன்னத இசையை வேட்டையாடும் நாய்.
04. பாம்புகள் உட்புகும் கனவு.
05. மெய்யுறங்கும் நாட்களின் கோடை
06. புனைவுக் காலத்தினுள் அமிழ்ந்த உண்மை முகம்.
07. நாக்குகளில் ஏற்றப்பட்டிருக்கிறது தூண்டில்
08. சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் மரணம்.
09. மூடுண்ட நகரத்தில் வாழ்பவனின் நாட்குறிப்பு

இதே வேளை இத்தகைய கவிதைகளுக்கு அப்பாலான பல நல்ல கவிதைகளும் இந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியில் உள்ளன.

பசியோடிருப்பவனின் அழைப்பு, தெய்வங்கள் எறிந்த கத்திகள், கை மறதியாய் எடுத்து வந்த மூக்குக் கண்ணாடி, நிகழ்கணத்தின் வலி, உரையாடலில் தவறிய சொற்கள், பாறைகளுக்கடியில் விழித்திருப்பவனின் இரவு போன்ற கவிதைகள் இந்த வகையில் சிறப்படைந்துள்ளன. குறிப்பாக உறவு, தன்னிலை உணர்தல் ஆகியவற்றில், இதில் 'நிகழ்கணத்தின் வலி' மனுஷ்ய புத்திரனின் கவிதைகளை நினைவுபடுத்தும் தன்மையுடையது.

'பொய்மையுடனான சினேகிதம்
எம்மையும் பொம்மைகளாக்கிவிட்டது
நாம் சிரித்தோம்
அது பொய்மையின் சிரிப்பு
நாம் அழுதோம்
அது பொய்மையின் அழுமை
நாம் கூத்தாடினோம்
அது பொய்மையின் களிப்பு
.........................
எமது அழுகையை
பொம்மைகளின் அழுகை என்றனர்
எமது இரத்தத்தை
பொம்மைகளின் இரத்தம் என்றனர்
கடைசியில் நாம்
பொம்மைகளாகவே இறந்து போகிறோம்'

சித்தாந்தனின் மொழியிலிருந்தும் வெளிப்பாட்டு முறையிலிருந்தும் வேறுபட்டிருக்கும் கவிதை இது. சித்தாந்தனின் கவிதைகள் அவருடைய மொழியமைப்பினாலும் வெளிப்பாட்டு முறையினாலும் எப்போதும் தனித்துத் தெரிபவை. கவித்துவம் கூடிய கணங்களை உள்ளம் சமமாகக் கொண்டவை.

'மறுதலிப்பின் நாழிகையில்
உடைந்து கிடந்தது பூச்சாடி'
(குரோதத்தின் கரத்தினோடு நாம் பகிர்ந்து கொண்ட இரவு)

'நானொரு பறவையை வரைந்தேன்
அது போராயுதமாயிற்று
அதன் நிழல் என் உறக்கங்களிலிருந்து
என்னைத் துரத்துகிறது
.........................
நிழல்களின் மௌனம் கொடியது
.........................'
(துரத்தும் நிழல்களின் யுகம்)

'திசைகளின் முரண்களிலிருந்து
ஈனத்தில் பிறப்பெடுக்கும் வனமிருகங்களின்
ஒழுங்கற்ற ஒலிக்குறிகளை
வாசித்தபடி புணரத் தொடங்கினோம்.
.........................'

இவையே சித்தாந்தனின் அடையாளத்தைக் காட்டும் மொழிதல். ஆனால், தன்னுடைய முதற் தொகுதிக் கவிதைகளுக்கும் இரண்டாம் தொகுதிக் கவிதைகளுக்குமிடையில் அவரிடம் முதிர்வு உருவாகியுள்ளது. இந்தக் கவிதைகள் நிகழ்காலத்தைப் பேசுவனவாக இருக்கின்றபோதும் பொது வெளிப் பிரக்ஞையை அதிகம் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

சுருக்கமாகச் சொன்னால் தனக்கான திசையினை அவர் கண்டுபிடித்துள்ளார் எனலாம். இந்தத் திசையில் இனித்தொடரும் பயணம் என்னவாக இருக்கும்? இந்தத் தொகுதியின் அட்டையை ரஸ்மி சிறப்பான முறையில் அமைத்துள்ளமை மேலும் நன்றாக உள்ளது.

நன்றி.

*- தவிர-*

## உலகின் பெரியவை

| | | |
|---|---|---|
| தீவு | - | கிறீன்லாந்து |
| மலை | - | எவரெஸ்ட் |
| கடல் | - | தென்சீனம் |
| வளைகுடா | - | மெச்சிக்கோ |
| விரிகுடா | - | ஹட்சன் |
| தீபகற்பம் | - | அராபியா |
| பூங்கா | - | உட்ப்பல்லோ |
| நூதனசாலை | - | மியூஸியம் ஒவ் நஷனல் ஹிஸ்ரறி |
| காடு | - | வாஸ்ட் கனிப்ரோஸ் |
| உவர்நீர் | - | காப்பியன் கொய்மோர் ஏரி |
| நன்னீர் | - | சுப்பீரியன் ஏரி |
| அரங்கு | - | பிராக் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலயம் மூலமாக விருத்தி செய்யப்படக்கூடிய இளைஞர் மேம்பாடு

இன்றைய உலகின் தேவைகள் பல்கிப் பெருகிவருகின்ற சூழ்நிலையில் உலக நாடுகள் பலவும் பல்வேறு சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் எமது இளைஞர்கள் பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் எமது இளைஞர்களின் வாழ்வியலை மேம்படுத்த எமது நாட்டில் அரசாங்கம் பல்வேறு நலததிட்டங்களையும் இளைஞர் சேவை அமைப்புக்களையும் நிறுவி உள்ள போதிலும் தனியாக அரசாங்கத்திடம் மட்டும் இப்பொறுப்பை நாம் சுமத்திவிட்டு பாராமுகமாக இருந்து விட முடியாது.

எனவே சமூக மட்டத்தில் குறிப்பாக அடிமட்டத்தில் மக்களோடு தொடர்பைப் பேணக் கூடிய கிராம ரீதியான ஒரு அமைப்பாக சனசமூக நிலையம் விளங்குவதால் இச் சனசமூக நிலையத்தின் ஊடாக இளைஞர் சேவைகளை மேம்படுத்த முடியும். இளைஞர்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் சனசமூக நிலையங்கள் ஊடாக தலைமைத்துவப் பயிற்சி வகுப்புக்களை மேற்கொள்ள முடியும். அத்துடன் இளைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சுயதொழில் கடன்களை வழங்கவும் முடியும்.

அத்துடன் இளைஞர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு விதமான பயிற்சி வகுப்புக்களையும் நடத்தமுடியும். இவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல் இளைஞர்களிடையே உளவியல் கருத்தரங்குகள் மற்றும் மதுபானம், போதைவஸ்து, புகைப்பிடித்தல் போன்றவற்றிற்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிட்டத்தையும் அறிமுகப்படுத்த முடியும். இவ்வாறு ஒவ்வொரு இளைஞர்களையும், ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்கள் நல்வழிப்படுத்த முற்படுமேயானால் எமது தாய்த்திருநாட்டின் இளைஞர் சமூகம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி நகரும்,

இத்தகைய தார்மீகப் பொறுப்பை ஒவ்வொரு பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களிலுள்ள சனசமூக நிலையங்கள் முன்னெடுக்க வேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. எமது கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் சிதைவடைந்துவரும் சூழ்நிலையில் எமது பிரதேசத்திலுமுள்ள ஒவ்வொரு சனசமூகநிலையங்களும் தார்மீகப் பொறுப்புடனும் சமூகப் பொறுப்புடனும் நடந்து கொள்வார்களேயானால் எமது இளைஞர்களின் வாழ்வியலை மேம்படுத்த முடியும். இத்தகைய பெரும் பணியை ஆற்றவேண்டியது ஒவ்வொரு பிரதேச மட்டங்களிலுமுள்ள சனசமூக நிலையங்களின் பிரதான பணியாக உள்ளது.

இத்தகைய பணிகளிற்கு புத்திஜீவிகள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரின் பங்களிப்பும் அவசியமானது. எனவே இளைஞர் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பை ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள சனசமூக நிலையங்கள் முன்னெடுக்குமேயானால் எமது நாட்டின் இளைஞர்களும் எதிர்காலத்தலைவர்களாகவும், சிறந்த புத்திஜீவிகளாகவும் மாற வழி ஏற்படும். இத்தகைய சமூக பணியை ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் முன்னெடுப்பதன் மூலம் இளைஞர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

த. தனுஷன்
யா/ஹாட்லிக்கல்லூரி
ஆண்டு 9 A

இச் சஞ்சிகையூடாக கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதி வறிய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவும் நோக்குடன் எமது ஆசிரியர் குழுவால் நேரடியாக வறியமாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதன் ஊடாக வழங்கப்படும். (ஆ.ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களின் எதிர்காலம்

யுத்தம் தந்த அவலங்கள் கொஞ்சமல்ல யுத்த அவலங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட எமது சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் கொஞ்சமல்ல தற்போது யுத்தம் முடிந்து சமாதானம் சூழல் நிலவினாலும் எமது சிறுவர்கள் நிம்மதியாக கல்வி கற்க முடியாத அளவிற்கு பல்வேறு நெருக்குதல்களை தினமும் சந்தித்து வருகின்றனர். தற்போது நவநாகரீகம் என்ற போர்வையில் எமது சிறுவர்கள் மீதான நெருக்கடிகளை பல தரப்பினரும் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக வீடுகளில் பிள்ளைகளின் பெற்றோர் மதுப்பிரியர்களாக இருந்தால் அவர்கள் மதுவை அருந்திவிட்டு மேற்கொள்ளும் ரகளையால் சிறுவர்களின் கவனம் தமது பெற்றோர் மீதே செல்லும் இதனால் அவர்களின் கற்றல் நடவடிக்கை முழுமையாக பாதிப்படையும் இதைவிட சில பெற்றோர் தற்போது தமது வீடுகளில் 24 மணி நேரமும் தொலைக்காட்சி பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். இதனால் சிறுவர்களின் கவனம் தொலைக்காட்சியில் திருப்புகிறது. இது ஒருபுறம் இருக்க சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் கடுமையாக கண்டிப்பதும் மாணவர்களை உளவியல் தாக்கத்திற்கு உட்படுத்துகிறது. மாணவர்களை இலகுவழியில் அன்புடன் அரவணைத்து கற்பித்தல் அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்படும் என உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். எமது சிறுவர்கள் மாணவர்கள் கல்வியில் எப்போதுமே சாதனையாளர்களாகவே திகழ்ந்து வருகிறார்கள் வன்னியில் பொருளாதாரத்தடை அமுலில் இருந்த காலங்களிலேயே குப்பி விளக்கில் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்றவர்கள்தான் எமது மாணவர்கள் தற்போதைய சூழலில் பொருளாதாரநெருக்கடி பொருட்களின் விலை ஏற்றம்



யாருக்கும அடங்காத ஒரு கூட்டத்தின் அடாவடி என பல்வேறு சவால்களை எதிர்கொண்டே தமது கற்றல்செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதைவிட சக்கோட்டை நெருந்தீவுப் பகுதிகளில் மாணவிகள் கொல்லப்படும் அளவிற்கு கோரச் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது. இவ்விடயங்களில் பெற்றோர். ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்தலைவர்கள் பொலிசார் என பல தரப்பினரும் விழிப்புணர்வுடன் செயற்பட்டால்தான் பிஞ்சுகளாக இருக்கும் எமது சிறுவர்களின் எதிர்காலம் சிறக்கும்

த. தனுஷன்

## ஆண்டு நிறைவு விழா

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - | காகித விழா |
| 3 வருடம் | - | தோல் விழா |
| 4 வருடம் | - | பூ விழா |
| 5 வருடம் | - | மர விழா |
| 6 வருடம் | - | கற்கண்டு விழா |
| 9 வருடம் | - | மணிக்கலச விழா |
| 10 வருடம் | - | தச விழா |
| 15 வருடம் | - | படிக விழா |
| 30 வருடம் | - | முத்து விழா |
| 40 வருடம் | - | மாணிக்க விழா |
| 100 வருடம் | - | நூற்றாண்டு விழா |
| 1000 வருடம் | - | மிலேனியம் விழா |

அம்பாளி கட்டடப் பொருள் விற்பனை கூடம்

எம்மிடம் தரமான மணவகைகள் கல்வகைகள் உட்பட அனைத்து கட்டட பொருட்களையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



தும்பளை வீதி,
பருத்தித்துறை.
0773086724.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை மாணவிகள்

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் 2011ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ந் திகதி அன்று அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட இந்து சமயப் போட்டியில், பருத்தித்துறை தும்பளை "நெல்லண்டை அம்மன் அறநெறிப்பாடசாலையை" சேர்ந்த இரு மாணவிகள் தேசிய மட்டத்திலும் முறையே 1 வது, 2வது இடங்களைப் பெற்று அவர்கள் 13.12.2011 அன்று பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில், மேற்படி திணைக்களத்தினால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

**தேசிய மட்டத்தில் 1வது இடத்தினை பெற்றவர்**

**செல்வி ஜெயரஞ்சன் அபிஷிகா**


வகுப்பு 2



தேசிய மட்டத்தில் 2வது இடத்தினை பெற்றவர்

**செல்வி ஸ்ரீநடராஜன் வேணுஜா**

வகுப்பு 4



அனுப்பவேண்டிய முகவரி

**"முதல்வன்"**

பிரதம ஆசிரியர்

**வே.தவச்செல்வம்**

ஒருதானை ஒழுங்கை

தும்பளை,

பருத்தித்துறை.

மாணவர்களின் சாதனைகள் இப்பகுதியில் தொடர்ந்தும் வெளிவரும் தங்களது பாடசாலையின் சாதனையாளர்களை புகைப்படத்துடன் விபரமாக எமக்கு அனுப்பிவையுங்கள்.

## ஆணாக இருந்து பெண்ணாக மாறி உலக அழகிப்போட்டிக்குத் தயாராகும் பெண்




அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் செயல்பட்டு வரும் டொனால்டு டிரம்பஸ் என்ற அமைப்பின் சார்பில் உலக அழகிப் போட்டிகள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு நாடுகளில் அழகிப் பட்டம் வென்றவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்பார்கள். இந்தப் போட்டியில் பங்கேற்பாளர்கள் அதன்படி கனடா நாட்டின் அழகிப் போட்டியில் ஜென்னா தலக்கோவா என்ற 23 வயது மொடல் அழகி பங்கேற்றார்.

ஜென்னாவுக்கு முதலில் அனுமதி மறுக்கப்பட்டபோது பேட்டி அளித்த கனடா அழகிப் போட்டி அமைப்பாளரான டெனிஸ் தவிலா; ஜென்னா உண்மையான பெண்ணைப் போல் இருக்கிறார்.

அவர் உண்மையான பெண்தான் ஆனால் விதிகளின்படி (பிறக்கும் போதே பெண்ணாக பிறந்திருக்க வேண்டும்) அவரை அனுமதிக்க முடியாது என்று கூறி இருந்தார்.

அதற்கு விளக்கம் அளித்த ஹொர்ஜன்னா 4 வயது வரை பெண்ணாகவே இருந்ததாகவும் அதன் பின்பு ஹார்மோன் மாற்றத்தினால் ஆணாக மாறி பின்பு 19 ஆவது வயதில் அறுவைச் சிகிச்சை மூலம் முழுமையான பெண்ணாக மாறிவிட்டதாகவும் கூறி இருந்தது. குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களைக் காக்கும் கறுப்புக் கண்ணாடி

கொளுத்தும் கோடை வெயிலில் தொப்பி கண்ணாடி இல்லாமல் வெளியில் போக முடியாது. ஏனெனில் கோடையில் கண்களை பாதுகாப்பது அவசியம். என்றைக்காவது வெளியில் சென்றால் பாதிப்பு அதிகம் இருக்காது. ஆனால் அடிக்கடி வெளியில் சுற்றுபவர்கள் புற ஊதாக்கதிர்களினால் பாதிக்கப்பட்டு கண் எரிச்சல், கண் சிவந்து போதல் ஏற்படும். இதனை தவிர்க்க சண்கிளாஸ் அணிந்து செல்வது அவசியம் என்கின்றனர். மருத்துவர்கள்.

கண்ட கண்ட கூலிங்கிளாஸ்களை வாங்கி அணிவதை விட தரமான கண்ணாடிகளை வாங்கி அணிவதே கண்ணிற்கு பாதுகாப்பானது என்றும் மருத்துவர்களும் அழகியல் நிபுணர்களும் தெரிவிக்கின்றனர். அவர்கள் கூறும் ஆலோசனைகளைப் பின் பற்றுங்கள்.



வெளியில் பயணம் செய்யும் போது சண் கிளாஸ் அணிவதனால் உஷ்ணத்தில் இருந்து கண்களை பாதுகாக்கும் இதனால் கண்கள் சோர்வடையாமல் புத்துணர்ச்சியாக இருக்கும். முக்கியமாக கறுப்புக் கண்ணாடிகளே கண்களுக்கு குளிர்ச்சி. கோடைகாலங்களில் கறுப்பு கண்ணாடிகளே சிறந்தது. ஏனென்றால் சூரிய வெளிச்சத்தில் இருக்கும் அல்ட்ரா கதிர்கள் 50 சதவீதம் 60 சதவீதம் வரை தாக்காமல் பாதுகாக்கின்றது.

சண் கிளாஸ் அணிந்து கண்ணாடியில் பார்த்தால் கண்கள் தெரியக்கூடாது. அப்படித் தெரிந்தால் அந்த லென்ஸ் உங்கள் கண்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்காது. எனவே கண்களை முற்றிலும் கவர் செய்யக்கூடிய சண் கிளாஸ் அணிவதே ஏற்றது. கண்களில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளவர்கள் அதற்கேற்ற கண்ணாடிகளை அணிய வேண்டும்.

சண் கிளாஸ் லென்ஸ் நிறத்தை தேர்ந்தெடுக்கும் போது கவனம் தேவை. அதேபோல் சண் கிளாஸ் நாம் கொடுக்கும் விலை சரியானது தானா என்பதை பார்க்க வேண்டும். லென்ஸ் மீது கீறல் விழாமல் இருப்பதற்கு என கோட்டிங் பூசப்பட்டிருகிறதா? என கவனிக்க வேண்டும். அதேபோல் தண்ணீர் மூலம் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதிப்பு ஏற்படாமல் இருக்க கோட்டிங் எதுவும் உள்ளதா என கவனிக்க வெண்டும் புற ஊதாக் கதிர்களில் இருந்து கண்களை பாதுகாக்கக் கூடிய கண்ணாடிதானா என்பதை கண்டறிந்து வாங்குவது நல்லது.


முக்கியாக சண் கிளாஸ் பிரேம் முக அமைப்பிற்கு ஏற்றதாக இருக்கிறதா என ஒரு முறைக்கு இரு முறை போட்டுப் பார்த்து வாங்க வேண்டும். அதேபோல் லென்ஸ் வடிவம் ஓவல் சதுரம் முக்கோணம் வட்டம் என பல வடிவங்களில் உள்ளது. அதில் எந்த வடிவம் நம் முகத்திற்கு ஏற்புடையதாக இருக்குமோ அதனை தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும் என்ற ஆலோசனை கூறுகின்றனர். அழகியல் நிபுணர்கள் கோடைகாலம் தொடங்கிவிட்டாலே கண் இமைகளின் மேல் வாரம் ஒரு நாள் இரவு நேரத்தில் மென்மையாக மசாஜ் செய்து விட்டுப் படுக்கவும். இது கண் இமைகள் வறண்டு போகாமல் தடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகப்படங்கள் ஏற்படுத்தும் தாக்கம்

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகள் மகிழ்ச்சியாக இருப்பதுதான் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சோகமான திரைப்படம் பார்ப்பது. துக்கமாக உணர்வது கூட குழந்தைகளின் குணாதிசயங்களில் பிரதிபலிக்கும் என ஆய்வாளர்தெரிவித்துள்ளனர்.



கருவில் உள்ள குழந்தைதாயின் மனநிலைக்கு ஏற்ப செயல்படும் என்று பல்வேறு ஆராயச்சிகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. மன அழுத்தமான சூழலில் கர்ப்பிணி இருந்தால் அது குழந்தையின் மூளைத்திறனை பாதிக்கும் என்றும் அதிகம் உணர்ச்சிவசப்படும் தாய்க்கு பிறக்கும் குழந்தைகள் உணர்ச்சிவசப் படக்கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் சமீபத்திய ஆய்வு ஒன்றில் கர்ப்பிணித் தாய்மார்கள் சோகமான திரைப்படத்தை பார்த்தால் அது கருவில் உள்ள குழந்தைகளை பாதிக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஜப்பானில் நடைபெற்ற ஆய்வில் கர்ப்பிணிகள் சிலர் மகிழ்ச்சிகரமான இசையை கொண்ட 5 நிமிடம் ஓடக் கூடிய திரைப்படத்தை பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அதேபோல அழுகை வரக்கூடிய சோகமான திரைப்படத்தின் கிளிப்பிங்ஸ் ஒன்றை வேறு சில கர்ப்பிணிகள் பார்க்குமாறு ஒளிபரப்பப்பட்டது. பின்னர் இவர்களின் கருவில் ஒள்ள குழந்தைகள் ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. அதில் மகிழ்ச்சிகரமாக திரைபடத்தை பார்த்த தாய்மார்களின் கருவில் இருந்த குழந்தைகள் சந்தோசமாக கை, கால் ஆட்டி உற்சாகத்தை வெளிப்படுத்தின.

அதேசமயம் சோகமான திரைப்படத்தை பார்த்தவர்களின் கரு குழந்தைகள் அமைதியாக எந்த வித அசைவும் இன்றி இருந்தது. தெரியவந்தது.

இதனால் தான் நம் முன்னோர்கள் கர்ப்பிணிப் பெண்களை எந்த வீதமான துக்ககரமான சம்பவங்ளும் பாதிக்காமல் பார்த்துக் கொண்டனர். கர்ப்பிணிகள் இனிய இசையை கேட்க வேண்டும். நல்ல புத்தகங்களை படிக்க வேண்டும என்று அறிவுறுத்தப்படுவதும் அதனால் தான்.

எனவே கர்ப்பிணிகளாக இருக்கும் பெண் பெரும்பாலும் மகிழச்சியாக தேவையான சத்தான உணவு வகைகளை உண்டு வர வேண்டும்.

தேவையற்ற வீண் கவலைகளை தவிர்த்து ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றேடுத்து மகிழ்ச்சியாக இருங்கள்.

## கட்டுரைப் போட்டி

மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமையினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் முதல்வன் சஞ்சிகை கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது போட்டியில் மாணவர்கள் அனைவரும் பங்குபற்ற முடியும் பாடசாலை என்றால் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம் அவசியம் பல்கலைக்கழகம் என்றால் பல்கலைக்கழக அடையாள அட்டையின் பிரதி கட்டுரையுடன் இணைக்கப்படுதல் அவசியம்.

### போட்டிக்கான தலைப்பு

* தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்
* இன்றை பொருளாதார நிலமை கல்வியில் ஏற்படுத்தும் தாக்கம்

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்வு செய்து 200 சொற்களிற்கு குறையாமல் 20.06.2012 ற்கு முன்னர் தங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி
**முதல்வன்**
கட்டுரைப்போட்டி
பிரதம ஆசிரியர்
**தவச்செல்வம்**
ஒருதானை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறக்கப்பட்ட மனிதரா சிவராம் (தராகி)

தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் சிவராமிற்கு நிகராக எவரையும் குறிப்பிட முடியாது ஏன் இலங்கையின் ஊடகத்துறை வரலாற்றில் கூட சிவராமிற்கு நிகராக எவரையும் குறிப்பிடமுடியாது சிவராம் என்ற தராகியுடன் இலங்கையில் கூடுதலாக பழகிய ஒரு சிலரில் நானும் ஒருவன் அந்த வகையில் சிவராமின் நிழல் பட்டாலே போதும் அவரின் நிழல்கூட ஆயிரம் கதை சொல்லும் சிவராம் என்ற ஊடகவியலாளர் சகல மட்டத்திலும் செல்வாக்கு உடையவராக இருந்தார். குறிப்பாக அரசமட்டம் எதிர் கட்சிகள், விடுதலைப்புலிகள், பிற தமிழ் கட்சிகள் என பல தரப்புடனும் நல்லுறவுடன் இருந்தவர் தான் சிவராம் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து உருவாக்குவதில் சிவராமின் பங்கு அளப்பரியது இது சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராசா போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்த விடயம் இதை கூட்டமைப்பில் தற்போது இருக்கின்ற பல புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை அல்லது அறிந்தும் அறியாதவர்கள் போல் இருக்கின்றார்களோ தெரியாது. இலங்கையில் ஊடகத்துறை வளரவேண்டும் தமிழ் ஊடகவியலாளர்கள் வளர வேண்டும் என்று அரும்பாடுபட்டவர் சிவராம். சிவராம் ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சியுடையவர் ஒருதடவை கொழும்பு பொறளையில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து சிவராமுடன் காரில் அவரது தெகிவளையில் உள்ள வீட்டிற்கு சென்று கொண்டு இருந்தேன் அப்போது சிவராமுடன் காரில் பயணித்தவர் மிகவும் சாதாரணமாக சிவராமுடன் கதைத்துக் கொண்டு வந்தார் சிவராமின் வீட்டில் சிவராமையும் என்னையும் இறக்கிவிட்ட பின்னர் சிவராம் என்னிடம் கேட்டார் இவர் யார் தெரியுமா என்று நான் தெரியாது என்றேன் இவர் தான் ஜனாதிபதி சந்திரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவர் என தெரிவித்தார். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து ஜனாதிபதி நேரடியாக தொலைபேசியில் சிவராமுடன் உரையாடினார் அந்த உரையாடல் நட்பு ரீதியாக இடம்பெற்றதை உணர முடிந்தது. இவ்வாறு அனைத்து தரப்புடனும் சிவராம் நெருக்கமாக தொடர்புகளையே பேணிவந்தார் கருணா விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்த போது சிவராம் வெளிப்படையாக விமர்சித்து எழுதினார் யாருமே எழுத அஞ்சிய நேரங்களில் சிவராம் துணிந்து விமர்சித்தார் இவ்வாறு நேரடியாகவும் கருணாவுடன் விமர்சித்து கதைத்துள்ளார் சிவராமின் குணாதிசயங்களை நன்கு உணர்ந்தவரான கருணா பிந்திய நாட்களில் சிவராமுடனான தொடர்புகளை துண்டித்தாரே தவிர சிவராமை கொல்ல வேண்டும் என்று ஒரு போதுமே எண்ணவில்லை சிவராமின் கொலைக்குபின் வழமை போன்று அரசாங்கத்தின் மீதும் பழிபோடப்பட்டது ஆனால் அரசாங்கத்திற்கு சிவராம் மீது கோபம் இருந்தாலும் அரசாங்கம் சிவராம் மீது கைவைக்க முயலவில்லை. சிவராமின் கொலைக்குபின் அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது வழமை போன்று புலிகளே சிவராமை கொன்றார்கள் என்று பழியைப் போட்டது. ஆனால் புலிகள் சிவராமை கொல்ல வேண்டிய தேவையே இருக்கவில்லை ஏன் எனில் புலிகளால் அவரது எழுத்தும் ஆழுமையும் நன்றாக இறுதிவரைக்கும் நேசிக்கப்பட்டது. சிவராம் என்ற (தராகி, முன்னாள் புளொட் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்து அந்த இயக்கத்தை கடுமையாக நேசித்த ஒருவர் ஆவர் ஆனால் இறுதி நாட்களில் தான் நேசித்தவர்களால் தனது உயிர் பறிக்கப்படும் என அவர் ஒரு போதுமே எண்ணியதில்லை அவரது நினைவுகள் இன்றைய நெருக்கடியான சூழலில் அவரை கொன்றவர்களை நிச்சயம் பாதிக்கும். சிவராமின் கனவுகள் அவரின் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் மறக்கப்பட முடியாதவை. இதனால் சிவராம் என்றைக்குமே மறக்கப்படமுடியாத மனிதர் ஆவார்.

வே.தவச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தனியார் பஸ் நடத்துனர்களின் அடாவடி



இலங்கையின் சகல பிரதேசங்களிலும் பஸ் நடத்துனர்களின் அடாவடி இருப்பதாக தினமும் பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்ற போதிலும் யுத்தம் முடிவிற்கு வந்து A-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் நடத்துனர்களும் யாழில் இருந்து கொழும்பிற்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் நடத்துனர்களும் பொது மக்களுடன் நடந்து கொள்ளும் முறை மக்களை அதிர்ச்சி அடைய வைக்கிறது போக்குவரத்து விதிகளை மீறி கூடுதலான பயணிகளை ஆடு, மாடுகளை ஏற்றுவது போன்று பஸ்களில் ஏற்றிவிட்டு வயோதிபர்கள் கர்ப்பிணிகள் என்று பார்க்காமல் அடாவடியும் புரிந்து வருகின்றனர் யாராவது தட்டிக்கேட்டால் எங்களை யார் என்று தெரியும்தானே என்று கூறி சிங்களத்தில் பயணிகளை பேசுகின்றனர். அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ் ஒன்றில் பயணிகள் வவுனியாவில் வைத்து ஏற்றப்பட்டனர். இந்தப் பயணிகள் இறங்கவேண்டிய இடம் கொடிகாமம் ஆனால் பஸ் நடத்துனர் மற்றும் சாரதிகள் பஸ்சில் பிரயாணம் செய்தவர்கள் ஏன் வழமைக்கு மாறாக கூடுதல் கட்டணம் அறவிடுகிறீர்கள் என்று கேட்டதற்காக குறித்த பயணிகள் ஐந்து பேரையும் கொடிகாமத்தில் இறக்காமல் வலுக்கட்டாயமாக யாழ்ப்பாணத்தில் கொண்டு போய் இறக்கி உள்ளனர். இது தொடர்பில் குறித்த பஸ்சின் இலக்கத்துடன் யாழ் தனியார் பஸ் கம்பனியிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்த போது குறித்த பஸ் கொழும்பில் பதிவு செய்யப்பட்டதால் தாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது என தனியார் பஸ் கம்பனி கைவிரித்துவிட்டது அப்படி என்றால் கொழும்பில் பதிவு செய்யப்பட்ட பஸ் நடதது்னர்கள் எந்த அடாவடியிலும் ஈடுபட முடியுமா? இதனால் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பில் யாழ் மாவட்ட தனியார் பஸ் கம்பனி தொடர்ந்தும் மௌனம் காக்கபோகிறதா இந்த கொடுமைகளிற்கு முடிவே இல்லையா.

த.நெருப்பன்.

# மின்காந்த அலைகள் என்றால் என்ன?



மின்சாரமும், காந்தமும் ஒருவிதமாகச் சேரும்போது ஏற்படும் சக்தியின் வெளிப்பாடே மின்காந்த அலைகள் (எலக்ரோ மக்னட்டிக் வேவ்ஸ்) ஆகும். இது பூமியிலிருந்தும், இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களிலிருந்தும் இயற்கையாகவே எழுகிறது. சூரியனிலிருந்து நமக்கு வரும் ஒளி கூட ஒருவித மின்காந்த அலையே.

இந்த மின்காந்த அலைகளின் அலைநீளத்தைப் பொறுத்து இவற்றின் தன்மை மாறுபடும். அவ்வாறு மாறுபடும் தன்மைகள் பலவிதமாக வெளிப்படுகின்றன. அவை, ரேடியோ அலைகள், மைக்ரோ அலைகள், ஒளி அலைகள், அகச்சிவப்புக் கதிர்கள். புறஊதாக் கதிர்கள், எக்ஸ் கதிர் மற்றும் காமா கதிர் ஆகும்.

ஒரு கடத்தியில் (கண்டக்டர்) மின்சாரம் பாயும் போது, அதைச் சுற்றி காந்தப் படலம் உண்டாகிறது என்று கண்டறிந்தார்கள். அதற்கு எதிர்மறையாக ஒரு மாறுகின்ற காந்தப் படலத்தைச் சுற்றியுள்ள ஒரு கடத்தியின் வழியாக மின்சாரம் பாய்கிறது என்று மைக்கேல் பாரடே கண்டுபிடித்தார்.

மாறுகின்ற மின்னோட்டம் ஒரு மின்காந்த அலையை உருவாக்குகிறது என்று 1873 இல் மக்ஸ்வெல் கண்டறிந்தார். அது வெளிப்புறமாக, ஒளியின் வேகத்தில் பாய்கிறது. நம் கண்ணுக்குத் தெரியும் ஒளியே ஒருவித மின்காந்த அலைதான். அந்த ஒளி அலையானது, மின்காந்த அலைவரிசையில் மிகச் சிறிய பாகத்தையே கொண்டிருக்கிறது.

மக்ஸ்வெல்லின் கொள்கைகள் இன்றும் உபயோகத்தில் உள்ளன.

மக்ஸ்வெல்லின் கோட்பாடு, விண்வெளி யியலில் முக்கியமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால், பூமியில் மட்டுமல்லாது, பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை பொருட்களில் இருந்தும் மின்காந்த அலைகள் உற்பத்தியாகின்றன என்று தெரியவந்த போது, அவற்றைப் பற்றிய நிறைய விஷயங்களை இன்னும் நுணுக்கமாக ஆராய்வது மேலும் எளிதானது.

மிக அதிக அலை நீளம் உள்ள மின்காந்த அலைகள், ரேடியோ அலைகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை, இரண்டு அடியிலிருந்து 10 கி.மீ. வரை அலைநீளம் கொண்டதாக இருக்கும். இவை மூன்றடிக்குக் கீழே இருந்தால் மைக்ரோ அலைகள் எனப்படுகின்றன. ரேடியோ அலைகள் மைக்ரோ அலைகளை விட அலைநீளத்தில் குறைந்திருந்தால் அவை அகச்சிவப்புக் கதிர்கள் எனப்படுகின்றன. அவற்றைக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அவற்றின் வெப்பத்தை உணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுலா மையமாகும் நிலாவரை

அமைதியான சூழல், மருது வேம்பு, வாகை மரங்கள் ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பும் ரம்மியமான சோலை, கால்பதித்தால் நிறமூட்டும் செம்மண், மண்வளத்தை எடுத்துக் கொட்டும் பயிர்ச்செய்கைச் சுற்றாடல், பருகும் போது மீண்டும் பருகத்தூண்டும் நீர் வளம், வந்தாரை வரவேற்கும் வீதியோர வர்த்தக நிலையங்கள், வற்றாத நீர் நிலையான ஆழ்கிணறு அத்தனையும் உற்று நோக்கிய வண்ணம் கோயில் கொண்டிருக்கும் நவசைலேஸ்வரர் ஆலயம், அத்துடன் யுத்த வடுக்களை தாங்கி நிற்கும் கட்டட இடிபாடுகளுடன் கூடிய சுற்றாடல் கொண்டது தான் 'நிலாவரை'.

புத்தூர் மேற்கில் அமைந்துள்ள இந்த அமைவிடம் யாழ் நகரில் இருந்து 16 ஆவது கிலோ மீற்றரில் யாழ் நகருக்கு வடதிசையில் அச்சுவேலி நோக்கிச் செல்லும் 'இராசவீதி' யும் புத்தூர்

சுன்னாகம் நெடுஞ்சாலையும் சந்திக்கும் வரணிச்சந்திக்கும் வடக்குப் புறமாக உள்ளது. வலிகிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் வடமேற்கு எல்லையில் வலிகிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் உள்ளூராட்சி ஆளுகைக்கு உட்பட்டது.

நிலாவரை என அழைக்கப்படும் இந்த அமைவிடம் நவக்கிரி அச்செழு, கலைமதி, சிறுப்பிட்டி கிராமங்களுக்கு நடுவிடத்தில் அமைந்திருப்பதோடு புத்தூர் கமநல சேவை நிலையம் சுதேச வைத்திய நிணைக்களத்தின் மூலிகைத் தோட்டம், கமநல சேவை திணைக்களத்தின் உரக்களஞ்சியம், வாதரவத்தை குடிநீர் விநியோகத்திட்டத்திற்கான நீரை வழங்கும் தேசிய வடிகாலமைப்பு குடிநீர் விநியோக அதிகார சபையின் 'ஆழ துளைக்கிணறு' பாதுகாப்பு தரப்பினரின் நிலாவரை இராணுவ முகாம் பாதுகாப்பு தரப்பினரால் நிர்மாணிக்கப்பட்ட ஆறு கோண கூரை அமைப்புக் கொண்ட முருகன் கோயில் படையினரின் தேநீர்சாலையுடன் கூடிய விற்பனை நிலையம் மற்றும் சில குடும்பங்களின் வாழ்விடங்களான இல்லங்களையும் கொண்டது.

அண்மைக்காலம் வரை மிக அமைதியாகவம் ஆள் அரவமற்ற பிரதேசமாகவும் காணப்பட்டது. உள்ளூர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒரு சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கும் வழிப்போக்கர்கள் மற்றும் விவசாயிகள் இளைப்பாறிச் செல்லும் இடமாகவும் விளங்கியது.

ஏ - 9 பாதை திறக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்பட்டதை அடுத்து வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் குடா நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் தரிசனத்துக்கு தப்பிவிடாமல் உற்று நோக்கப்படும் மிக முக்கியமான சுற்றுலா மையம். நாளாந்தம் வெளிமாவட்ட சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் பல ஒரே நேரத்தில் தரித்து நிற்பதையும் பல நூற்றுக் கணக்கான பயணிகள் ஆறுதலாக அமர்ந்திருந்து உண்டு மகிழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் கண்ணில் படாமல் நிலைவரை தப்புவது இல்லை.

அது மட்டும் நிலாவரைச் சூழலை தமது கமராக்கள் வீடியோ பதிவுகளுக்கு உள்ளாக்காமல் விடுவதும் இல்லை.

சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கும் யாழ் மாவட்டத்துக்குச் சிறப்பாக உரிய பனம் பண்டங்களையும், பனையோலை கைப்பணிப் பொருட்களையும், யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்தையும், மாம்பழத்தையும் விற்பதற்கு நடைபாதை விற்பனை நிலையங்கள் மணிப்பிரவான நடையில் சிங்களத்தையும் தமிழையும் கலந்து பேசும் நடைபாதை வியாபாரமும் பாப்போரை கவர்ந்திழுக்காமல் இல்லை.

அது மட்டுமல்ல 'தென்னிலங்கை கைப்பணிப்பொருள் கித்துள் பனங்கட்டி, பல்வேறு வகையான வளையல்கள் மற்றும் உணவு நிலையங்களும் வகை வகையாக வந்தோரை வரவெற்ற வண்ணம் உள்ளன. மேலும் விசாலமான சிற்றுண்டிச்சாலைகளும் தமிழ், சிங்கள சிறப்புச் சிற்றுண்டிகளும் சைவ உணவு அவைச உணவு வகைகள் உள்ளடக்கியவையாக உள்ளன.

நிலாவரைக்கும் நவசைலேஸ்வரத்துக்கும் பூர்வீகமான புராண இதிகாச கதைத் தொடர்புகளும் கர்ண பரம்பரைக் கதைத் தொடர்புகளும் பல உண்டு. அந்தவகையில் இராம பிரான் தமிழ் வேந்தன் இராவணனை சங்காரம் செய்து விட்டு வடநாடு திரும்பும் போது ஸ்தாபித்த தலம் தான் நவசைலேஸ்வரம் என்றும் அவரது அம்பினால் தோண்டப்பட்டது தான் நிலாவரை வற்றாத நீர் நிலை என்றும் கூறப்படுவது உண்டு.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




★ STAR FURNITURE

அனைத்து விதமான தளபாட பொருட்களும் மலிவு விலையில் உயர்தரத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நெல்லியடியில் நாடவேண்டிய ஒரே இடம்

T.P.No: 0772478800



பிரதான வீதி,
நெல்லியடி.

HIGH STAR INN

உயர் தர நட்சத்திர விடுதி

பருத்தித்துறை புலோலி சாரையடியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் ஆகியோரை கவரும் விதத்தில் நவீன வசதிகளுடன் தரமான படுக்கை அறைகள் கொண்ட ":உயர்தர நட்சத்திரவிடுதி" நீங்கள் ஒருமுறை சென்றால் மீண்டும் ஒருமுறை செல்லத் தூண்டும்


T.P.No: 0779321143
0779337410

சாரையடி,
புலோலி. பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வசந்நிதி செல்லையா ஐயர் கலாச்சார மண்டபம்

வட மாகாணத்தில் 1000 பேர் பங்கு பற்றக்கூடிய நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட கலாச்சார மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது திருமணங்கள், நினைவு தினங்கள், பிறந்தநாள் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பரத நாட்டிய அரங்கேற்றம், என்பனவற்றை வெளிநாடுகளின் தரத்தில் நடத்தக்கூடிய ஒரே மண்டபம் செல்வச்சந்நிதியில் உங்கள் கரங்களில்

## தொடர்புகளுக்கு

பொன் புவனேந்திரஐயர் - 415 - 731 - 8453
பாலசுப்பிரமணிய ஐயர் - 021 321 8058
முகுந்தன்: - 0770873506
பவன் - 0773364211



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி விநாயகர் ஓவ்செற் பிறின்ரேர்ஸ், பிரதான வீதி, பருத்தித்துறை